தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

₹ 15/- | மலர் 16 இதழ் 12 ஏப்ரல் 2015 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்கள்
உற்பத்திப் பொருட்களின்

விற்பனைக் கண்காட்சி

மகளிர் மேளா 2015 கோடைக் கொண்டாட்டம்

அனைத்து வங்கி சேவைகளும் ஒரே இடத்தில்...
பாரதீய மகிளா வங்கி லிமிடெட்.

உங்கள் சேமிப்பிற்கு அதிக வருவாய்.

BMB SAVINGS
சேமிப்புக் கணக்கு

5%* p.a
₹1 லட்சத்துக்கும் அதிகமான தொகைக்கு

4.5% p.a
₹1 லட்சம் வரை

*வங்கிக் கணக்கில் உள்ள மொத்த தொகைக்கும் 5%

BMB SAVINGS
சேமிப்புக் கணக்கு

BMB SILVER SAVINGS
சேமிப்புக் கணக்கு

BMB GOLD SAVINGS
சேமிப்புக் கணக்கு

BMB Komal Kali

உங்களின் மகளுக்கு சுதந்திரத்தின் சிறகுகளை அளித்திடுங்கள்

பெண் குழந்தைகளுக்கு சுய அதிகாரம் வழங்கும் ஒரு புதுமையான ரெக்கரிங் டெபாஸிட்

• வயது : ஒரு நாள் குழந்தை முதல் 15 வயது வரை • குறைந்தபட்ச மாதாந்திர முதலீடு ரூ. 50 அல்லது அதற்கும் அதிக தொகை. மிகச் சரியாக ரூ. 50-ன் பெருக்குத் தொகை • மாதத் தவணையை மாதத்தின் எந்த தேதியில் வேண்டுமானாலும் செலுத்தும் வசதி • காலம் : 3 ஆண்டுகள் முதல் பத்தாண்டுகள் வரை • கடன் வசதி உண்டு : மொத்த மதிப்பின் 85% (தனி நபர் விபத்து காப்பீடு) • TDS இல்லை

இணையதளம்: www.bmb.co.in
https://bmbsmartbanking.co.in/netbanking

பிஎம்பி
பாரதீய மகிளா வங்கி
மகளிருக்கு சுய அதிகாரம், பாரதத்தின் சுய அதிகாரம்.
முற்றிலும் இந்திய அரசுக்குச்சொந்தமானது

BMB
BHARATIYA MAHILA BANK
Empowering Women, Empowering India.
Wholly owned by Govt. of India

சென்னை கிளை : ஓவர்சீஸ் டவர்ஸ், 756-L, அண்ணா சாலை,
சென்னை - 600 002. தொலைபேசி : 044 28523321

கோயமுத்தூர் கிளை : தேவராஜன் சென்டர், ஐயப்ப பூஜா சங்கம் அருகில், 206/1,
சத்யமூர்த்தி ரோடு, ராம்நகர், கோயமுத்தூர் - 641 009 தொலைபேசி : 0422-4373749/29

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு **முற்றம்**

திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அன்புள்ள மாணவ செல்வங்களே!

வரப் போவது மே மாதம். பனிரெண்டாம் வகுப்பு முடித்து, மேற்படிப்புக்காக என்ன செய்யலாம் என்று மாணவ – மாணவிகளும், பெற்றோர்களும் அங்கும் இங்கும் ஆலோசனைகள் என்ற பேரில் பல தகவல்களை, கண்ணில் கண்ட நபர்களிடம் எல்லாம் கேள்விகளாக கொட்டி வாங்கிக் கட்டிக் கொள்ளும் நேரம்.

தம்பி/பாப்பா, நீ என்ன படிக்கப் போகிறாய்? என்ற கேள்விக்குக் கிடைக்கக் கூடிய பதில்கள் பெரும்பாலும் என்னவாக இருக்கும் தெரியுமா?

நன்கு படிக்கக் கூடிய முதல் தர மாணவர்கள் சொல்லும் பதில்.

மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவர், வழக்கறிஞர்...

சுமாராகப் படிக்கக் கூடிய, அறுபது சதவிகிதம் மதிப்பெண்கள் எடுக்கக் கூடிய மாணவ மாணவிகளின் தேர்வு, இளங்கலை பட்டப் படிப்பு, கலை, அறிவியல், கணிதம், பி.காம்., போன்றவை...

இன்னும் குறைவாக மதிப்பெண்கள் எடுக்கக் கூடிய, தேர்ச்சி பெற்ற, அல்லது தேர்ச்சி பெறாத மாணவர்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? திக்கு தெரியாத காட்டில், வழி அறியாமல் தடுமாறிக் கொண்டு இருக்கிறீர்களா?

இந்த ஆண்டு தேர்வில் பங்கேற்றவர்கள் மட்டும் இல்லை. கடந்த சில ஆண்டுகளில் படித்து முடித்து இருந்தாலும், மேற்படிப்போ, வேலை வாய்ப்போ இன்றி இருக்கும் இளைஞர்களுக்கும், இப்போது நான் சொல்லப் போகும் விஷயம் பொருந்தும்.

நீங்கள் 15 வயது முதல் 35 வயது உடையவரா?

கைக்காசை செலவழிக்காமல் புதிய தொழிலைக் கற்றுக் கொள்ள ஆர்வம் உள்ளவரா?

குடும்ப வருமானத்தை அதிகரிக்கக் கனவு காண்பவரா? வேலை செய்ய வெளியூர் செல்லவும் தயாராக இருக்கிறீர்களா?

உங்களுக்கு உதவ தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது.

வாழ்க்கையை வெற்றிகரமாக துவக்க, உங்களின் திறமைகளைக் கண்டறிந்து மேம்படுத்த, உறுதியான வேலை வாய்ப்பினைப் பெற்று சமூக நன்மதிப்பைப் பெற, வருமானத்தைப் பெருக்க, உங்களுக்கு வழிகாட்ட தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்ட அலுவலர்கள் காத்திருக்கின்றனர்.

ஆண்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள் என அனைவரும் இந்தத் திட்டங்களின் மூலம் பயன் பெறலாம். மூன்று மாதம் முதல் ஓராண்டு காலம் வரை உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கப்படும். தகுதி வாய்ந்த நிறுவனங்களின் மூலம், ஓட்டுனர் பயிற்சி, தையல் பயிற்சி, ஹோட்டல் நிர்வாகம், கணினிப் பயிற்சி, மின்சாதனங்கள் பராமரிப்பு குறித்த பயிற்சி என பல்வேறு துறைகளில் பயிற்சி அளிப்பது மட்டும் இன்றி, வேலைவாய்ப்பிற்கும் உத்தரவாதம் வழங்கப்படுகிறது.

எனவே தகுதியான நபர்கள், அவரவர் மாவட்டங்களில் உள்ள, திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) மற்றும் புதுவாழ்வு திட்ட மேலாளரையோ அணுகி பயன் பெறலாம்.

உங்களின் வளமான வாழ்க்கைக்கு எனது வாழ்த்துகள்.

என்றும் அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
மலர் 16 இதழ் 12 ஏப்ரல் 2015
விலை ரூ. 15/–

கௌரவ ஆசிரியர்
வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
டி. ஆர். வேதநாயகம்
கூடுதல் இயக்குநர்
எம். மாதவி
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
எல். ராஜா
கூடுதல் திட்ட இயக்குநர்
ஆர். ராஜசேகர்
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
ப. கலைமதி
மக்கள் தொடர்பு அலுவலர்

முற்றம் உதவியாளர்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு (ஒப்பந்தம்)
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், ‘முற்றம்’
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி: 044–2817 3412 / 3413
தொலைநகல்: 044–2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

உழைப்பவர் சீதனம்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

எந்த பொருட்களின் மீது அதிகமாக மனித உழைப்பானது செலுத்தப்படுகிறதோ அந்த பொருட்களுக்கு மதிப்பு அதிகம் என்ற தத்துவத்தை கம்யூனிசத்தின் தந்தையாகிய கார்ல் மார்க்ஸ் அவர்கள் கூறியுள்ளார். இதிலிருந்து மனித உழைப்பானது எவ்வளவு மதிப்பு வாய்ந்தது என்பதும், எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதும் தெளிவாகிறது.

சேற்றில் உழைக்கும் விவசாயத் தொழிலாளிகள், உயிர்கள் வாழ உணவைப் படைக்கின்றனர். வெயில் என்றும் மழை என்றும் பாராமல் உழைக்கும் கட்டிடத் தொழிலாளிகளின் உழைப்பால் பயனுள்ள கட்டமைப்புகள் உருவாகின்றன. இரவு பகலாகக் கண் விழித்து தொழிற்சாலைகளில் உழைக்கும் தொழிலாளர்களால் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த உழைப்பை கொடுக்கும் தொழிலாளர்களுக்கு வணக்கம் செலுத்தும் தினம்தான் உழைப்பாளர் தினமாகிய மே தினம். இதைத்தான் ‘மே தினம் உழைப்பவர் சீதனம்’ என்று குறிப்பிடுகின்றனர்.

இந்த உழைப்பாளர்களுக்குத் தேவையான நலத் திட்டங்களையும், உழைப்பிற் கேற்ற ஊதியமும், சம்பாதிக்கும் இலாபத்தில் பங்கீட்டு உரிமையும் வலியுறுத்து வதற்காகத்தான் ‘உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்’ என மார்க்ஸ் கோஷம் எழுப்பினார். தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பது, அவர்களின் உரிமைகளைப் பெற குரல் கொடுப்பது, உடல் உழைப்பை மதிக்கும் பண்பை உருவாக்குவது ஆகியவைகள் சமுதாயத்தின் கடமையாகும்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபடும் தொழிலாளர்களின் கஷ்டத்தை மற்றவர்களும் புரிந்து கொள்வதற்காக என்றே வருகிறதோ என்னவோ... இந்த மே மாதம் கொளுத்தும் கோடை வெயில். ஒவ்வொரு ஆண்டும் வெப்பத்தின் அளவு அதிகரித்துக் கொண்டு வருவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற நாம், இதைக் கட்டுப்படுத்த எந்தவித திட்டத்தையும் வகுத்து செயல்படுத்த முன் வருகிறோமா என்பதுதான் கேள்விக் குறியாகவே உள்ளது.

அரசு இதற்கான பல திட்டங்களைத் தீட்டினாலும், அதனை செயல் படுத்துபவர்கள் நேர்மையாகவும், மக்களின் பங்கேற்புடனும், சமூக பொறுப்புடனும் செயல்படுத்தினால் இந்தப் புவியில் இயற்கையைக் காக்க முடியும், வெப்பத்தைக் குறைக்க முடியும். அழிக்கப்பட்ட காடுகளை மீண்டும் உருவாக்குவோம். விரிந்து கிடக்கும் நீர் நிலைகளை புதுப்பிப்போம். எப்படியெல்லாம் முடியுமோ அப்படியெல்லாம் மழை நீரை சேகரிப்போம். மனித குலம் பல கோடி ஆண்டு வாழ பூமியைப் பாதுகாப்போம்.

இப்படிக்கு



(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

केनरा बैंक
(भारत सरकार का उपक्रम)

Canara Bank
(A Government of India Undertaking)
Together We Can

Have you linked your bank account to your Aadhaar number?

Aadhaar Seeding is easy!

Choose any one of the following options

- Visit www.canarabank.com & opt for linking of Aadhaar & status verification
- Send SMS to 5607060 from your registered mobile: CAN <space> AADHAAR <space> 13 Digit A/c Number <space> 12 Digit AADHAAR NUMBER
- Feed Aadhaar request at ATMs
- Dial Call Center No. 1800 425 0018 and furnish your Account Number and Aadhaar Number
- Net Banking for Internet Banking, customers can log in through their Net Banking Account and submit request

Customers may also visit Canara Bank branch and seed Aadhaar number.

For details, contact your nearest branch or log on to www.canarabank.com

Scan for online facilities

On linking, you will receive a confirmation sms from us.

In case you do not have an account, you can open a new Account with Aadhaar copy

स्वच्छ भारत
एक कदम स्वच्छता की ओर

Toll Free: 1800 425 0018 | Save Trees. Save Water. Save Environment. | www.canarabank.com

உள்ளே...

அழகு...அழகு...

ஆசியாவிலேயே உயரமான தொட்டில் பாலம் 8

மாவட்ட செய்திகள் 10

வங்கி சேவைகள் 12

மகளிர் மேளா விற்பனைக் கண்காட்சி 16

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 25

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் 29

பண்ணைக் கழிவுகளில் இருந்து உரம் 34

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.



புலவர் மு. சண்முகம்,
மாவட்ட வருவாய் அலுவலர் (பணிநிறைவு)

5/1310, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தெரு,
இலக்கியம்பட்டி, தருமபுரி - 636705
நாள் : 2-4-2015.

'முற்றம்' ஆசிரியருக்கு,

வணக்கம்.

2015 மார்ச் 'முற்றம்' இதழில் வெளியிடப்பட்டுள்ள மேலாண்மை இயக்குநர் அவர்களின் 'காதல் என்ற மாயவலை' என்ற கவிதை மிக அழகிய - அற்புதமான படைப்பு. இன்றைய சமுதாயத் தேவையும் கூட. காலமறிந்து இக் - கவிதையைப் படைத்துள்ளதும் வெளியிட்டுள்ளதும் வெகு சிறப்பு. பொதுவாகவே 'முற்றம்' இதழ் அழகிய வடிவமைப்புடன் திகழ்வதோடு அதில் வெளியிடப்படும் செய்திகளும் பயனுள்ள குறிப்புகளும் அரசின் புதுவாழ்வுத் திட்ட விளக்கங்களும் மகளிர்க்குப் பெரிதும் பயன்படும் வகையில் உள்ளன.

தொடரட்டும் இவ்வரிய பணி.

தங்கள் நம்பிக்கையுள்ள,
மு. சண்முகம்
2-4-15

பெறுநர்
ஆசிரியர், 'முற்றம்',
தேனாம்பேட்டை, சென்னை - 34.

கிராமப்புற மக்களின் வாழ்வில் வளம் சேர்த்திட ஏதுவாக பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வரும் புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயல்பாடுகளையும், அவர்களின் வெற்றிக் கதைகளையும் மாதந்தோறும் முற்றம் இதழ் சிறப்பாக வெளியிட்டு வருகிறது. முற்றத்திற்கு நன்றி

திருமதி. கிருஷ்ணவேணி
அன்னை இந்திரா மகளிர் குழு,
ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டம் குறித்த செய்திகளும், அதனால் பயன் பெற்றவர்கள் குறித்த விபரங்களும் முற்றம் இதழில் சிறப்பாக வெளியிடப்படுகிறது.

திருமதி. அன்னபூரணி (ஊக்குனர்),
தங்க நட்சத்திரம் சுய உதவிக் குழு,
கல்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

யார் இவர்? அறிந்து கொள்வோமா?

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு முக்கிய பிரிவாக இளைஞர்களுக்கான திறன் மற்றும் வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சிகள் தின தயாள் உபாதியாய கிராமின் கௌஷல்யா யோஜனா (DDU GKY) 'வலிமை மிக்க இந்தியாவை உருவாக்கி உலகை வலுப்படுத்துவோம்' என்ற இலக்குடன் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பண்டிட் தினதயாள் உபாதியாய, இவர் உத்திர பிரதேச மாநிலத்தில் 1916 செப்டம்பர் 25ஆம் நாள் பிறந்தார். இவர் தத்துவம், பொருளாதாரம், சமூகவியல், ஊடகவியல் மற்றும் அரசியல் அறிவியலில் வல்லுநர் ஆவார்.

இவர் பெயரில் பல்கலைக் கழகம், மருத்துவமனை, கல்லூரிகள் பல மாநிலங்களில் செயல்பட்டு வருகின்றன. மற்றும் பல அரசு திட்டங்கள் இவர் பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவரின் பெயரில் தபால்தலையும் வெளியிடப்பட்டுள்ளது.

இவர் 1968ஆம் ஆண்டு பிப்ரவரி 11ஆம் தேதி காலமானார். இவர் பெயரில் தமிழ்நாட்டிலும், 'தினதயாள் உபாதியாய கிராமின் கௌஷல்யா யோஜனா' என்ற பெயரில் திறன் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொகுப்பு – ஒய். ஜான்சன், உதவித் திட்ட அலுவலர், திருவண்ணாமலை

கவிதை

மனநல ஆத்திச்சூடி

அறிந்து கொள் மனநலம்
ஆற்றுப்படுத்து மனநோய்
இணைந்து செயல்படு
ஈகோ கைவிடு
உள்மனம் உணர்வாய்
ஊன் அதை வலுச் செய்
எண்ணத்தில் வளம் கொள்
ஏற்றம் பெற உழை
ஐம்புலன் ஆற்றல் கொள்
ஒற்றுமை பழகு
ஓய்வதை மேற்கொள்
ஔசதம் எடுப்பாய்
அஃதே இனிதாய் இருப்பாய்

சோம்பேறிக்கு கிடைத்த தண்டனை

ஒரு ஊரில் ஒரு சோம்பேறி வாழ்ந்து வந்தான். அவனுக்கு உழைக்க வேண்டும் என்ற எண்ணம் வந்ததே இல்லை. எந்த வேலையும் செய்யாமல் சுலபமான வழியில் எப்படி சம்பாதிக்கலாம் என அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போது அவனுக்கு ஒரு யோசனை வந்தது.

திருடி சம்பாதிக்கலாம் என அவன் முடிவு செய்தான். முதல் நாள் திருட கிளம்புவதற்குள் அவனை சோம்பல் ஆட்கொண்டது. திருடுவதற்குக் கூட அவனது சோம்பேறித்தனம் இடம் கொடுக்கவில்லை. மீண்டும் யோசித்தான். வெகு நேரம் கழித்து ஒரு குரங்கிற்கு திருட பயிற்சி கொடுத்து அதை திருடி வரச் செய்யலாம் என முடிவு செய்தான்.

அந்த சோம்பேறி கஷ்டபட்டு ஒரு குரங்கைப் பிடித்து வந்து, அதற்குத் திருட பயிற்சி அளித்தான். குரங்கிற்கு பயிற்சி முடிந்தது. முதல் முதலாக அக்குரங்கை அந்த சோம்பேறி திருட அனுப்பினான். முதல் முறையாக திருட சென்ற குரங்கு, அந்த ஊர் ஜமீன்தார் வீட்டிற்கு சென்று விலை மதிக்க முடியாத ரத்தினங்கள் பதித்த மாலை ஒன்றை திருடிக் கொண்டு வந்து சோம்பேறியிடம் கொடுத்தது. அதிக மதிப்புள்ள அந்த திருட்டு மாலையைப் பார்த்த சோம்பேறி மகிழ்ச்சியில் குதித்தான். தான் பயிற்சி கொடுத்த குரங்கு அதிக மதிப்புள்ள பொருளை திருடியதில் அவனுக்கு பேரானந்தம்.

அந்த மாலை மட்டும்தான் அவன் கண்களுக்குத் தெரிந்தது. விரைவில் இந்தக் குரங்கை வைத்து பெரிய பணக்காரன் ஆகிவிடலாம் என கனவுக் கோட்டைக் கட்டினான்.

பின் விளைவுகளைப் பற்றி சிறிதும் யோசிக்காமல், உடனடியாக அந்த திருட்டு மாலையை அணிந்து கொண்டு, ஊர் மக்கள் அனைவரிடமும் பெருமையாகக் காண்பித்தான் அந்த சோம்பேறி.

ஜமீன்தார் வீட்டில் திருட்டு போன நவரத்தின மாலையை சோம்பேறி அணிந்திருப்பதைப் பார்த்த ஊர் மக்கள், அந்த சோம்பேறியைப் பிடித்து ஜமீன்தார் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். நவரத்தின மாலையைத் திருடியது மட்டுமல்லாமல் அதை தைரியமாக ஊர் மக்களிடம் அந்த சோம்பேறி காட்டியதை அறிந்த ஜமீன்தார் அவனுக்கு தண்டனை வழங்க முடிவு செய்தார்.

உழைக்காமல் திருடி வாழ நினைத்த சோம்பேறிக்கு தண்டனையாக காலம் முழுவதும் அந்த ஊரின் தெருக்களை சம்பளம் வாங்காமல் சுத்தம் செய்யும்படி கூறினார். சோம்பேறியாக காலம் தள்ளிய தனக்கு, சம்பளம் கூட இல்லாமல் வேலை செய்யும் தண்டனை அளிக்கப்பட்டதை நினைத்து அந்த சோம்பேறி வருத்தமடைந்தான்.

தனது சோம்பேறித்தனத்துக்கு கிடைத்த சரியான தண்டனை இது என்று நினைத்தான்.



இரு மலைகளுக்கு இடையில் தொட்டில் போன்ற அமைப்புடன் காணப்படுவதால் 'தொட்டில் பாலம்' எனவும் இது அழைக்கப்படுகிறது.

ஆசியாவிலேயே உயரமான

மாத்தூர் தொட்டிப்பாலம்...

மாத்தூர் தொட்டிப் பாலத்தால் பல ஹெக்டர் விவசாய நிலங்கள் பயன் பெறத் தொடங்கின. தரிசு நிலங்கள் விவசாய நிலங்களாக மாறின. கன்னியாகுமரி மாவட்டம் விவசாயத்தில் சிறப்பான வளர்ச்சியைக் கண்டது. ஒருபுறம் நீரோடும் தொட்டி போன்ற அமைப்பும், மறுபுறம் மக்கள் நடந்து செல்லும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாலத்தின் ஒரு முனையில் இருந்து மறு முனைக்கு நடந்து செல்லலாம்.

தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோயிலுக்கு அருகில் உள்ள மாத்தூர் என்ற ஊரில் ஆசியாவிலேயே மிகவும் நீளமானதும், உயரமானதுமான தொட்டிப் பாலம் அமைந்துள்ளது.

கணியான் பாறை மலை மற்றும் கூட்டு வாயு பாறை மலை என இரண்டு மலைகளையும் இணைத்து, பறளியாற்றின் நீரைக் கொண்டு செல்வதற்காக ஏறத்தாழ 115 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாலம் சுமார் ஒரு கிலோ மீட்டர் நீளம் கொண்டதாகும். 40 அடி தூர இடைவெளியில் அமைக்கப்பட்டுள்ள 28 இராட்சத தூண்கள் இந்தப் பாலத்தைத் தாங்கி நிற்கின்றன.

ஒரு காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள விளவன்கோடு, கல்குளம் ஆகியவை வறண்ட பகுதிகளாக இருந்தன. அப்பகுதியில் நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தால் வளம் கொழிக்கும் பகுதியாக மாறும் என்பதால், அன்றைய முதலமைச்சர் அமரர் காமராஜர் அவர்களின் முயற்சியால் தொடங்கப்பட்ட இத்திட்டம், 1966ஆம் ஆண்டு நிறைவு பெற்றது.

இந்தப் பாலத்தில் அமைக்கப்பட்டுள்ள 7 அடி உயரமும் 7 அடி அகலமும் கொண்ட தொட்டி போன்ற வாய்க்கால் வழியே பறளியாற்றின் நீரானது ஒரு பகுதி மலையில் இருந்து மறு பகுதி மலைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இரு மலைகளுக்கு இடையில் தொட்டில் போன்ற அமைப்புடன் காணப்படுவதால் 'தொட்டில் பாலம்' எனவும் இது அழைக்கப்படுகிறது.

ஒரு புறம் நீரோடும் தொட்டி போன்ற அமைப்பும், மறுபுறம் மக்கள் நடந்து செல்லும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாலத்தின் ஒரு முனையில் இருந்து மறு முனைக்கு நடந்து செல்லலாம். இரு மலைகளுக்கிடையே அடர்ந்து காணப்படும் தென்னை, ரப்பர் மரங்கள், சலசலத்து ஓடிக் கொண்டிருக்கும் ஆறு என இயற்கையின் அழகினை விவரித்துக் கூற இயலாது.

பாலத்தின் மேற்பகுதியில் நடந்து செல்லும்போது, நில மட்டத்திலிருந்து நாம் நிற்கும் உயரத்தைக் கற்பனை செய்தால், நமக்கு ஏற்படும் பய உணர்ச்சியை கட்டுப்படுத்த முடியாது. எனினும் அந்த அனுபவத்தை அனைவரும் விரும்புவர். உயர்ந்த தென்னை மரங்கள் மற்றும் பாக்கு மரங்கள் நமக்கு கீழே நிற்கும் காட்சியும், பாலத்தின் அடியில் சலசலத்து ஓடும் ஆறும் காண்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாகும்.

பாலத்தின் வழியே நடந்து சென்று மறுமுனையை அடைந்தால், எங்கு பார்த்தாலும் ரப்பர் மரத் தோட்டங்களே காட்சிக்குத் தெரியும். அங்குள்ள வீடுகள் ஒவ்வொன்றிலும் அன்னாச்சி பழம் உட்பட பல்வேறு பழச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. ரப்பர் தோட்டங்களுக்கிடையில் தேனி வளர்ப்பும் நடைபெறுகிறது.

பறளியாற்றின் நீரைக் கொண்டு செல்வதற்காக ஏறத்தாழ 115 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாலம் சுமார் ஒரு கிலோ மீட்டர் நீளம் கொண்டதாகும்.

பாலத்தில் அமைக்கப்பட்டுள்ள சுழல் படிகளின் வழியாக கீழே இறங்கி, பாலத்தின் அடியில் ஓடிக் கொண்டிருக்கும் நதியினை அடையலாம். இப்பகுதியில் குழந்தைகள் விளையாட சிறிய பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாலம் அமைந்துள்ள பகுதியில் பூந்தோட்டங்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன என்பதால் தமிழகம் மட்டுமல்லாது பிற மாநிலத்தினரும் மாத்தூர் தொட்டில் பாலத்தைக் காண அதிக அளவில் வருகை தருகின்றனர்.

மேற்கு தொடர்ச்சி மலையின் பகுதியான மகேந்திர மலையில் இருந்து உருவாகும் தண்ணீர் ஆறாக ஓடி, இப்பகுதியில் விவசாயத்திற்கு மிகுந்த பயனைக் கொடுக்கிறது.

மாத்தூர் தொட்டிப் பாலத்தால் பல ஹெக்டர் விவசாயநிலங்கள்பயன்பெறத்தொடங்கின. தரிசு நிலங்கள் விவசாய நிலங்களாக மாறின. கன்னியாகுமரி மாவட்டம் விவசாயத்தில் சிறப்பான வளர்ச்சி பெற்றதற்கு மாத்தூர் தொட்டில் பாலமும் ஒரு காரணம் ஆகும்.

சரஸ்வதியின் சபதம் பாகம் – 1

அத்தியாயம் 1

வீராசாமி (வேலையாள்) : சத்தியம் நீயே... தர்மத் தாயே... குழந்தை வடிவே... தெய்வ மகளே... ட்ரியோ...ட்ரியோ...

சரஸ்வதி: வீராசாமி... வேலைய பார்க்காம பாட்டுப் பாடிக்கிட்டு இருக்க...

வீராசாமி: அம்மா, நம்ம 'தெய்வானை' பால் கறக்க நிக்க மாட்டேங்குது. அதான் பாட்டு பாடி பால கறக்கலாம்னு இருக்கேன்.

சரஸ்வதி: வீராசாமி, தெய்வானைக்கு இதுதான் முதல் பிரசவம், முதல் கன்று போட்ட பசுக்கள் பெரும்பாலும் பால் கறக்க லேசுல விடாது. கால தூக்கும். உதைக்கக்கூட செய்யும்.

வீராசாமி: அப்ப கால கட்டிலாம்...

சரஸ்வதி: அதுதான் கூடாது, கால கட்டி பால கறந்தா அதே பழக்கமாயிடும். அப்புறம் உதைக்கிற பழக்கமும் வந்திடும், அதனால...

வீராசாமி: ஆடுற மாட்ட ஆடிக் கறக்கணும்... பாடுற மாட்ட பாடிக் கறக்கணும்...

சரஸ்வதி: வீராசாமி, தெய்வானை நேத்து தான் கன்னு போட்டுச்சி. இன்னும் 2 அல்லது 3 நாளைக்கு அப்படித்தான் உதைக்கும். ஆனால் எப்படியாவது தெய்வானையை அடிக்காம, கால கட்டாமா, தாஜா பண்ணி பால கறந்துடணும். சீம்பால கறக்கலன்னா மடிவீக்கம் வந்துடும். அப்புறம் நீதான் மாட்டாஸ்பத்திரிக்கும் வீட்டுக்கும் தெய்வானையை கூட்டிக்கிட்டு அலையணும். ஜாக்கிரதை...

அலமேலு: வணக்கம் அக்கா, நல்லா இருக்கீங்களா?

சரஸ்வதி: வாம்மா அலமேலு, நீ எப்படி இருக்க?

அலமேலு: நல்லா இருக்கேன் அக்கா... அக்கா, நம்ம ஊர்ல 'கிராம வறுமை ஒழிப்பு' சங்கத்தின் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு சொந்தமா தொழில் செய்ய கடன் உதவி செய்யுறாங்களாம். அத பத்தி விபரம் கேட்கலாம்னு வந்தேங்கா...

வீராசாமி: அலமேலு எப்ப வெந்த?

அலமேலு: ஊம்... இப்பதான் வெந்தேன்...

வீராசாமி: நல்லா வெந்தியான்னு பாக்குறேன்.

அலமேலு: லூசு மாமா... சும்மா இரு...

சரஸ்வதி: கோவிச்சுக்காத அலமேலு, வீராசாமி உன் மேல எவ்வளவு பாசமா இருக்கான் தெரியுமா? உன் காலு ஊனமா இருந்தாலும் உன்னைத் தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு என்கிட்ட அடிக்கடி சொல்லுவான். அது மட்டும் இல்லம்மா, இந்த மாதம் 'கிராம வறுமை ஒழிப்பு சங்க' கூட்டத்தில் உனக்கு கறவை மாடு வாங்க ரூ. 20,000/– வட்டியில்லாக் கடன் தரணும்னு தீர்மானம் கொண்டு வந்ததும் வீராசாமிதான்.

வீராசாமி: அம்மா, நீங்க பேசிக்கிட்டு இருங்க, நான் மாட்டாஸ்பத்திரிக்கு போயி தெய்வானைக்கு சத்து மருந்து என்ன தரலாம்னு கேட்டுட்டு வரேன்.

அலமேலு: என்னக்கா 'தெய்வானைக்கு' மருந்து வாங்க மாட்டாஸ்பத்திரிக்கு போறன்னு சொல்றாரு.

சரஸ்வதி: அலமேலு, எங்க ஊட்ல இருக்கிற எல்லா மாட்டுக்கும் பேர் வைச்சிருக்கோம். பேரைச் சொல்லித் தான் மாட்டையே கூப்பிடுவோம். கால்நடை செல்வமும் விவசாயமும் ஒரு ஊர்ல சிறப்பா இருந்தா நோயில்லா மக்களுடைய தூய்மை கிராமமா அந்த ஊர் விளங்கும். இதுக்கும் நம்ம அரசாங்கம் நிறைய திட்டங்கள் கொண்டு வந்திருக்காங்க.

அலமேலு: அக்கா, இந்த திட்டங்கள் பற்றி கொஞ்சம் விளக்கமாக சொல்லுங்களேன்.

சரஸ்வதி: ஒவ்வொரு மாதமும் நம்ம ஊர்ல 'கிராம வறுமை ஒழிப்பு சங்கம்' மூலம் மாதாந்திர கூட்டம் நடக்குது. அதுல நம்ம கிராம வளர்ச்சிக்கும், கிராம ஏழை எளிய மக்கள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கும் என்னென்ன திட்டங்கள் இருக்கு என்பதைப் பற்றியும், 'ஒத்த தொழில் குழு' மற்றும் 'விவசாயத்தில் பெண்களின் பங்களிப்பு' திட்டங்கள் பற்றியும் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துச் சொல்லுவாங்க. நீயும் வந்து அந்தக் கூட்டத்தில் கலந்து கொள். எல்லா விவரமும் தெரிந்து கொள்ளலாம்.

அலமேலு: கண்டிப்பா வர்ற 'கிராம வறுமை ஒழிப்பு சங்க' கூட்டத்தில் கலந்துகிறேன் அக்கா...

(சந்திப்போம் அடுத்த இதழில்)

டாக்டர் பி. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக
வாழ்வாதார இயக்கம்
சென்னை.

நமது மாவட்டம்

ஈரோடு

ஒருங்கிணைப்பு செயல் விளக்கக் கூட்டம் மற்றும் மாற்றுத் திறனாளி ஊக்குனர்களுக்கான திட்ட விளக்கப் பயிற்சி

ஈரோடு மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் – தூய்மை இந்தியா இயக்கம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டங்களின் கீழ் தனிநபர் இல்ல கழிப்பறைகள் கட்டுதல் தொடர்பான ஒருங்கிணைப்பு செயல் விளக்கக் கூட்டம் 01.04.2015 அன்று ஈரோடு மாவட்ட இயக்க மேலாண்மை அலகு அலுவலகத்தில் மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திருமதி. ரேணுகாதேவி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், செயற்பொறியாளர், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார திட்ட மேலாளர்கள், வட்டாரங்களின் பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இரண்டாம் கட்டமாக செயல்படுத்தப்பட்டு வரும் வட்டாரங்களான பவானி, பவானிசாகர், சென்னிமலை, சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி ஆகிய 5 வட்டாரங்களில் அமைக்கப்பட்டுள்ள 70 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் தேர்வு செய்யப்பட்டு, மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் நலனுக்கான செயல்பாடுகளை மேற்கொண்டு வரும் 70 சமூக மாற்றுத் திறனாளி ஊக்குனர்களுக்காக திட்டம் தொடர்பான ஒருநாள் விளக்க பயிற்சி 06.04.2015 அன்று ஈரோடு மாவட்ட இயக்க மேலாண்மை அலகு அலுவலகத்தில் நடைபெற்றது. மேற்படி பயிற்சியில் 65 சமூக மாற்றுத் திறனாளி ஊக்குனர்கள் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பெருங்கடன்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பைங்குளம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பெருங்கடனாக, பைங்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் மூன்று கோடி ரூபாய்க்கான காசோலையினை, 08.04.2015 அன்று மாவட்ட ஆட்சியர் திரு. சஜ்ஜன் சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் டாக்டர். எஸ். சுரேஷ், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திரு. வி. எம். கலைச்செல்வன், பைங்குளம் கூட்டுறவு வங்கி தலைவர் திரு. ஊ. ராஜகுமார், செயலாளர் திரு. கனகராஜ், உதவித் திட்ட அலுவலர்கள் திரு. அந்தோணி சிலுவை, திருமதி. விஜயலட்சுமி, திருமதி. கலைச்செல்வி, திருமதி. சுசித்ரா, திரு. பிச்சையப்பா உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

நீலகிரி

கல்லூரி சந்தை

நீலகிரி மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் பொருட்களின் கல்லூரிச் சந்தை குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரியில் 17.03.2015 முதல் 19.03.2015 வரை நடைபெற்றது. நீலகிரி மாவட்ட ஆட்சியர் முனைவர் பொ, சங்கர், இ.ஆ.ப., அவர்கள் இந்த கல்லூரிச் சந்தையினை துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஊரக வாழ்வதார திட்ட இயக்குநர் (பொ) திரு. ம. ஜான்சாமுவேல், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் திரு. எம். ரத்தினவேல், கல்லூரி முதல்வர் டாக்டர். ஷீலா மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர். இந்த கல்லூரி சந்தையில் நீலகிரி, ஈரோடு, நாமக்கல், திருவண்ணாமலை, திருப்பூர், கோவை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுவினர் தயாரித்து விற்பனைக்கு வைத்திருந்த பொருட்களை கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர். ■

மதுரை

மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம்

மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களின் மகளிர் திட்ட அலுவலர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களுக்கான மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம், 11.04.2015 அன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள் திரு. டி. ஆர். வேதநாயகம், திருமதி. எம். மாதவி ஆகியோர் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். மாவட்ட அளவிலான முன்னோடி வங்கி மேலாளர், இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பாரத மாநில வங்கி, பாண்டியன் கிராம வங்கி மற்றும் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி ஆகியவற்றின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டன. இந்த ஆய்வில் மதுரை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு. அ. பாண்டியன் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், வங்கியாளர்கள் கலந்து கொண்டனர். ■

கோவை

மண்டல அளவிலான சாராஸ் கண்காட்சி

அகில இந்திய அளவில் அனைத்து மாநிலங்களிலும் செயல்படும் உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் மண்டல அளவிலான சாராஸ் கண்காட்சியினை கோவை, ஆர்.எஸ்.புரத்திலுள்ள சாஸ்திரி மைதானத்தில் 06.04.2015 அன்று மாவட்ட மகளிர் திட்ட கூடுதல் இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. த. முருகன் அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சியர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்தக் கண்காட்சியில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் மட்டுமல்லாது, உத்ராகண்ட், உத்திரபிரதேசம், ஆந்திரம், தெலுங்கானா மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்களும் கலந்து கொண்டனர்.

விழுப்புரம்

இயக்கச் செயல்பாடுகள் ஆய்வு

விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை கூடுதல் இயக்குனர் திருமதி. மாதவி அவர்கள் ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் ஆரோவில் நிறுவன பங்களிப்புடன் அமையவுள்ள பயிற்சி நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்த ஆலோசனை பிச்சாண்டிகுளம் ஆரோவில் அலுவலகத்தில் நடைபெற்றது. தியாகதுருகம் தனமூர்த்தி தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்திலும், சங்கராபுரம் எஸ்.ஆர்.எம். இன்போ டெக் பயிற்சி நிறுவனத்தையும் ஆய்வு செய்த கூடுதல் இயக்குநர் அவர்கள், அங்கு பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தவர்களுடன் கலந்துரையாடியதுடன், பயிற்சியாளர்களுக்கும், பயிற்சி நிறுவனத்திற்கும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இந்த ஆய்வின் போது, வாழ்வாதார இயக்க கால்நடை ஆலோசகர் டாக்டர் பி. துரைராசன், விழுப்புரம் மாவட்ட வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு. ஆர். மணி மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

காஞ்சிபுரம்

மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தொடர்பான மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம் 07.04.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில், முதன்மை செயல் இயக்குநர் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் இயக்குநர்கள் திரு. டி. ஆர். வேதநாயகம், திருமதி. எம். மாதவி, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களின் திட்ட இயக்குநர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக
வாழ்வாதார இயக்கம்

வாழ்வாதாரத்தை

வளமாக்கும் வங்கி சேவைகள்

வட்டி மானியம்

ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் இதழ்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி விகிதம் மற்றும் வட்டி மானியம் பற்றி விரிவாக பார்த்தோம். பலர் இதை படித்திருப்பீர்கள். சிலர் படிக்க வாய்ப்பு இல்லாமல் போயிருக்கலாம். எல்லோரின் நன்மைக்காக முக்கிய விபரங்களை இந்த இதழில் அட்டவணைப்படுத்தியுள்ளோம்.

வ.எண்.	பிரிவு – 1 மாவட்டங்கள்	பிரிவு – 2 மாவட்டங்கள்
1	விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி	சென்னை மற்றும் பிரிவு 1 மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்கள்
2	வங்கிகள் கடன் வழங்கும் நாளிலிருந்தே (முன் கூட்டியே) 7% வட்டி விகிதத்தில் கடன் வழங்கும்	வங்கிகள், சுய உதவிக் குழுக்களுக்கு நடைமுறையில் உள்ள வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்கும், (உதாரணம் 10.50 % (அ) 11.00 %)
3	குறித்த நாட்களில், தவணை தவறாமல் கடனை திரும்ப செலுத்திய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 3% கூடுதல் வட்டி மானியத் தொகை வழங்கும். ரூ. 3 இலட்சங்கள் வரையிலான கடன்களுக்கு நிகர வட்டி 4% ஆகும்.	குறித்த நாட்களில், தவணை தவறாமல் கடனை திரும்ப செலுத்திய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 3 இலட்சங்கள் வரையிலான கடன்களுக்கு 7% வட்டிக்கும், வங்கி நடைமுறையில் உள்ள வட்டி விகிதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை வட்டி மானியமாக வழங்கப்படும். நிகர வட்டி 7% ஆகும். கூடுதல் வட்டி மானியம் கிடையாது.
4	சமுதாயம் மற்றும் பொருளாதார நிலை பொருட்படுத்தாமல், எல்லா மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் வட்டி மானிய தொகை பயன் பெற தகுதி உடையவை.	தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இணைக்கப் பட்டுள்ள எல்லா மகளிர் சுய உதவிக் குழுக்கள், வட்டி மானிய தொகை பயன் பெற தகுதி உடையவை.
5	பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் அரசு மானியத்துடன் வாங்கிய கடன்களை, வெற்றிகரமாக திரும்ப செலுத்திய பிறகு, புதிய கடன்கள் பெற்றுள்ள சுய உதவிக் குழுக்களும் பயன் அடைய முடியும்.	பொன்விழா கிராம வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் அரசு மானியத்துடன் வாங்கிய கடன்களை, வெற்றிகரமாக திரும்ப செலுத்திய பிறகு புதிய கடன்கள் பெற்றுள்ள சுய உதவி குழுக்களும் பயன் அடைய முடியும்.
6	மகளிர் சுய உதவிக் குழுக்கள் யார் உருவாக்கி யிருந்தாலும், அந்த குழுக்கள் வட்டி மானியம் பெற தகுதி வாய்ந்தவை.	மகளிர் சுய உதவிக் குழுக்கள் யார் உருவாக்கியிருந்தாலும், அது தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தகுதிபடி இருந்தால், அந்த குழுக்கள் வட்டி மானியம் பெற தகதி வாய்ந்தவை. (தகுதி – மகளிர் சுய உதவி குழுவில் உள்ள உறுப்பினர்களில் 70% உறுப்பினர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களாக இருத்தல் வேண்டும். (அ) மக்களாய்வு முறைப்படி () தெரிவு செய்யப்பட்டு, கிராம சபை ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும்.

7	சுழல் நிதி மட்டும் பெற்ற சுய உதவிக் குழுக்கள் இந்த திட்டத்தில் பயன் பெற தகுதி வாய்ந்தவை. பொருளாதார கடன் மானியம் பெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்கள், தகுதி இல்லாதவர்களாக கருதப்படுவர்	சுழல் நிதி மட்டும் பெற்ற சுய உதவிக் குழுக்கள் இந்த திட்டத்தில் பயன் பெற தகுதி வாய்ந்தவை. பொருளாதார கடன் மானியம் பெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்கள், தகுதி இல்லாதவர்களாக கருதப்படுவர்
8	01.04.2013ம் தேதியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெயரில் நிலுவையுள்ள கடன்கள் மற்றும் அன்றோ (அ) அதன் பிறகு கொடுக்கப்பட்ட கடன்கள் (ரூ. 3 இலட்சங்கள் வரை) இத்திட்டத்திற்கு தகுதி பெறும். ரூ. 3 இலட்சத்திற்கு மேல் உள்ள நிலுவை தொகைக்கு, வங்கிகள் அதன் நடைமுறையில் உள்ள வட்டி விகிதத்தில் வசூல் செய்யும்.	01.04.2013ம் தேதியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெயரில் நிலுவையுள்ள கடன்கள் மற்றும் அன்றோ (அ) அதன் பிறகு கொடுக்கப்பட்ட கடன்கள் (ரூ. 3 இலட்சங்கள் வரை) இத்திட்டத்திற்கு தகுதி பெறும். ரூ. 3 இலட்சத்திற்கு மேல் உள்ள நிலுவை தொகைக்கு, வங்கிகள் அதன் நடைமுறையில் உள்ள வட்டி விகிதத்தில் வசூல் செய்யும்.

வட்டி மானியம் பணம் தீர்வு அளித்தல்

வ.எண்.	பிரிவு – 1 மாவட்டங்கள்	பிரிவு – 2 மாவட்டங்கள்
1	மத்திய அரசு, பொதுத்துறை வங்கிகளில் ஒன்றை சரக வங்கியாக தெரிவு செய்து, அந்த வங்கியின் மூலம் பிரிவு–1 மாவட்டங்களுக்கு வட்டி மானியத்தை, வங்கிகளுக்கு வழங்கும்	மாநில அரசு, பொதுத்துறை வங்கிகளில் ஒன்றை சரக வங்கியாக தெரிவு செய்து, அந்த வங்கியின் மூலம் சுய உதவிக் குழுக்களின் கடன் கணக்கில் வட்டி மானியத் தொகையினை வரவு வைக்கும்.
2	வங்கிகள் 01.04.2013 முதல் 31.01.2014 வரையில் கொடுக்கப்பட்ட கடன்களின் வட்டியை 7% மாற்றி அமைக்கும். 7% வட்டிக்கு அதியமாக வசூலித்த தொகையினை வங்கிகள், அந்தந்த சுய உதவிக் குழுக்களின் கடன் கணக்கில் திரும்ப செலுத்தும். அவ்வாறே 3% கூடுதல் மானியமும் கடன் கணக்கில் வரவு வைக்கப்படும்.	மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பற்றிய சிறப்பு குறிப்புகளை தொகுத்து, அந்த குழுக்கள் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின்படி உள்ளது என்று உறுதிபடுத்தி சான்றிதழ் வழங்குதல்.
3	சுய உதவிக் குழுக்கள், கடனை நேர் செய்திருந்தால், வட்டி மானியம் அந்தந்த சுய உதவிக் குழுக்களின் சேமிப்பு கணக்குகளில் வரவு வைக்கும்.	கடன் கணக்கு முடிவடைந்திருந்தால், வட்டி மானியத் தொகை அந்த குழுவின் சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்படும்.
4	பிரிவு – 1 மாவட்டங்களுக்கான வட்டி மானிய தொகைக்கான நிதி மாநில அரசுக்கு கிடைக்காது.	பிரிவு – 2க்கான நிதியை நிர்வகித்தல், வட்டி மானிய தொகையினை தகதியின் அடிப்படையில் சுய உதவிக் குழுக்களின் கடன் கணக்கில் வரவு வைக்க, சரக வங்கிக்கு ஆணையிடுதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை மேற் கொள்ளும்.

(தொடரும்)



இயற்கைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள் நம் உடலுக்கு வலிவையும், நலத்தையும் தரும் என்பதால் இயற்கை உணவுகளை அதிகம் உண்ண வேண்டும்.

கண்ட திப்பிலி ரசம்

தேவையானப் பொருட்கள்

கண்ட திப்பிலி (நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும்) - 1 தேக்கரண்டி, புளி - நெல்லிக்காய் அளவு, மிளகு - அரை தேக்கரண்டி, மிளகாய் - 2, தனியா - 1 தேக்கரண்டி, சீரகம் - அரை தேக்கரண்டி, உப்பு - தேவையான அளவு, கருவேப்பிலை - சிறிதளவு.

செய்முறை

அடுப்பில் வாணலியை வைத்து, அதில் சிறிது எண்ணெய் ஊற்றி, புளியைத் தவிர மீதி அனைத்துப் பொருட்களையும் போட்டு பொன்னிறமாக வறுத்து, மிக்ஸியில் போட்டு நைசாக அரைத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் இரண்டு டம்ளர் தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து, அதனுடன் அரைத்து வைத்துள்ள பொருட்களை போட்டு நன்கு கொதிக்க விடவும். பின்னர் சிறிய அளவு டம்ளரில் தண்ணீர் விட்டு, கடுகினை தாளித்து போட்டு அடுப்பில் இருந்து இறக்கி வைக்கவும். அந்த ரசத்தை சாதத்துடன் சேர்த்து சாப்பிடலாம், தனியாகவும் அருந்தலாம். சளித் தொல்லை, உடல் வலி போன்றவை தீரும். ஜீரண சக்தி பெருகும். குறிப்பாக எண்ணெய் குளியல் எடுக்கும் போது, இந்த ரசத்தை சாப்பிடுவது மிகவும் நல்லது. இந்த ரசத்திற்கு தக்காளி - துவரம் பருப்பு போன்றவை சேர்க்க வேண்டாம். ■

கரிசலாங்கண்ணிக் கீரை

கீரை வகைகளில் மருத்துவப் பயன் நிறைந்தது கரிசலாங்கண்ணி கீரையாகும். கொஞ்சம் உஷ்ணத்தை அளிக்க கூடியது என்றாலும், இந்தக் கீரையில் சத்துக்கள் நிறைய உள்ளன. மஞ்சள் கரிசலாங்கண்ணி மற்றும் வெள்ளைக் கரிசலாங்கண்ணி என இரண்டு வகைகள் உள்ளன.

கரிசலாங்கண்ணி இலைகளை உள்ளங்கையில் தேய்த்து கசக்கினால் அந்த இடம் கருப்பாக மாறி விடும். இதனால் இந்தக் கீரையிலிருந்து தைலம் தயாரித்து தலையில் தேய்த்துக் குளித்து வருவதால் பார்வை தெளிவுடன் தலை முடியும் கருமையாகவும் பளபளப்புடனும் விளங்கும்.

மஞ்சள் கரிசலாங்கண்ணி கீரையை சாப்பிடுவதன் மூலம் மஞ்சள் காமாலை நோயின் தாக்குதலில் இருந்த நம்மைக் காத்துக் கொள்ளலாம். சிலருக்கு கிறுகிறுப்பு மற்றும் பார்வை இருண்டு போவது போன்றவை ஏற்படும். அவர்கள் இந்தக் கீரையை சாப்பிடுவதன் மூலம் குணம் பெறலாம்.

உடல் உள்ளுறுப்புகளில் ஏற்படும் வேண்டாத நீர்க்கசிவுகளை தடுக்கும் ஆற்றலும், நோய்க்கிருமிகளை அழிக்கும் ஆற்றலும் இந்தக் கீரைக்கு உள்ளது. பித்த சம்பந்தமான நோய்கள் எல்லாவற்றிற்கும் இது சிறந்த நிவாரணியாகும். குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்த நோய்களை குணமாக்க வல்லது. சளி அதிகம் சேர்ந்து திணறும் நிலையில் இதன் சாற்றைக் கொடுத்தால் அடைப்பு நீங்கி விடும்.

பெண்களுக்கு தொல்லை தரும் பெரும்பாடு என்னும் வியாதியை குணமாக்க இதன் சாற்றை கஷாயம் தயாரித்துக் கொடுக்கலாம்.

பாம்பு போன்ற விஷ ஜந்துக்கள் கடித்து விட்டால் இதன் சாற்றை உள்ளுக்குக் கொடுக்க விஷம் உடலில் பரவாமல் தடுக்கப்படும்.

ஆறாமல் தொல்லைக் கொடுக்கும் சரும நோய்களை தீர்க்க, இக்கீரையை மை போல அரைத்துக் வெளிப்பூச்சாக பயன்படுத்தலாம்.

பற்களுக்கு வலுவையும் பளபளப்பையும் அளிக்க வல்லது. வழுக்கையையும் நரையையும் போக்க வல்லது. ஆரம்ப நிலையில் இருக்கும் புற்று நோய்களை பரவாமல் தடுக்கும் ஆற்றல் இந்தக் கீரைக்கு உண்டு.

கரிசலாங்கண்ணி கீரையிலிருந்து தைலம் தயாரித்து தலையில் தேய்த்துக் குளித்து வருவதால் பார்வை தெளிவுடன் தலை முடி கருமையாகவும் பளபளப்புடனும் விளங்கும்.

வீட்டுக் குறிப்புகள்

கோடை காலத்தில் மதிய உணவில் வெஜிடபிள் சாலட் அவசியம் சேர்க்க வேண்டும். அதிக எண்ணெயில் பொரித்த உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும்.

வீட்டில் எறும்புப் புற்று இருந்தால் அங்கே கொஞ்சம் பெருங்காயத் துளைத் தூவி விட்டால் எறும்புத் தொல்லை இருக்காது.

வீட்டில் பிரிட்ஜ் இல்லையென்றால், இட்லி மாவு, தோசை மாவு போன்றவை புளித்து போகாமல் இருக்க, அரைத்த மாவை பிளாஸ்டிக் டப்பா அல்லது பக்கெட்டில் போட்டு மூடி வைத்தால் மாவு புளித்து போகாமல் இருக்கும்.

குத்து விளக்கு, காமாட்சி அம்மன் விளக்கு போன்றவற்றின் மேல் நுனியில் ரப்பர் பேண்டைச் சுற்றிப் பூ வைத்தால் கீழே விழாது.

துணிகளில் எண்ணெய் கறையோ, கிரீஸ் கறையோ பட்டுவிட்டால், அவற்றைத் துவைக்கும் போது சில சொட்டுக்கள் நீலகிரித் தைலம் விட்டு கழுவினால் கறைகள் போய்விடும்.

எவர்சில்வர் பாத்திரங்கள் பளபளப்பு மங்கினால், வாரத்திற்கு ஒரு முறை விபூதியைக் கொண்டு நன்கு தேய்த்து வாருங்கள். வெள்ளிப் பாத்திரங்கள் போல் மின்னுவதைப் பார்க்கலாம்.

வெள்ளி ஆபரணங்களுடன் சிறிது கற்பூரத்தைப் போட்டு வைப்பதால் வெள்ளி ஆபரணங்கள் கறுப்பாவதை தவிர்க்கலாம்.

பிளாஸ்டிக் பக்கெட் ஓட்டையாகி விட்டால், பழைய டூத் பிரஷைத் தீயில் காட்டி உருகும் திரவத்தை ஓட்டை உள்ள பகுதியின் மீது படிய வைத்தால் ஓட்டை அடைபடும்.

சிறு ஷாம்பு பிளாஸ்டிக் கவர்கள் காலியானதும் அவற்றைத் துணிகளை ஊற வைக்கும் போது அதனுடன் போட்டு ஊற வைத்தால் துணிகள் மணமாக இருக்கும்.

பயனுள்ள குறிப்புகள்...

அழகுக் குறிப்புகள்

அன்றாடம் நாம் சமையலறையில் பயன்படுத்தும் பொருட்களைப் பயன்படுத்தியே நமது அழகைப் பராமரிக்கலாம். நம் உடல் அழகைப் பராமரிக்கும் சில பொருட்களை வீட்டிலேயே எளிதாக செய்யலாம்.

பாசிப் பருப்பு மாவு

முகத்தில் சிலருக்கு ஆங்காங்கே கருப்பு திட்டுகளும், கண்ணுக்குக் கீழே அடர்த்தியாக கருவளையமும் தோன்றும். இதுபோன்று உள்ள பெண்கள் பாசி பருப்பு மாவுடன் கசகசா, பாதாம், பிஸ்தா, துளசி, ரோஜா மொட்டு ஆகியவற்றை நன்கு காய வைத்து பவுடர் போன்று அரைத்து வைத்துக் கொள்ளவும். இந்தப் பவுடரை தினமும் பாலுடன் சேர்த்து குழைத்து முகத்தில் பூசி, 15 நிமிடங்களுக்குப் பிறகு கழுவி வந்தால் முகத்தின் கருமை காணாமல் போகும்.

வெங்காயத்தை உணவில் அதிக அளவு சேர்த்துக் கொண்டால், வியர்வையால் ஏற்படும் உடல் அரிப்பைத் தடுக்கலாம். வாரத்திற்கு இரண்டு முறை தலைக்கு எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும். குளிக்கும் நீரில் வேப்பிலையைப் போட்டு குளித்தால் சரும நோய்கள் வருவது தவிர்க்கப்படும்.

வேனல் கட்டிகளுக்கு சந்தனமும் மஞ்சளும் கலந்து பூசி வர, நல்ல பலன் கிடைக்கும்.

பேரீட்சம் பழம்



கொட்டை நீக்கிய பேரீச்சம் பழம், உலர்ந்த திராட்சைப் பழம் ஆகியவற்றை ஒரு நாள் முழுவதும் வென்னீரில் ஊற வைக்க வேண்டும். அதன் பிறகு அரைத்த இந்த கலவையுடன் அரை ஸ்பூன் பப்பாளி பழக்கூழை கலந்து கொள்ளவும். இந்தக் கலவையை முகத்தில் அழுத்தமாகப் பூசி 25 நிமிடம் கழித்து முகத்தை கழுவ வேண்டும். இப்படி அடிக்கடி செய்தால் வெயிலால் கறுத்த முகம் மீண்டும் பொலிவு பெறும்.

ஆப்பிள்

ஆப்பிள் விழுது, தக்காளி விழுது, தர்ப்பூசணி விழுது மூன்றையும் சமநிலையில் எடுத்து ஒன்றாக கலக்கி, அதை பஞ்சில் முக்கி எ டு த் து , முகத்தில் ஒற்றி எடுத்தால் முகம் நல்ல பிரகாசம் அடைந்து குளுமையாக இருக்கும்.

பலாப்பழம்

வைட்டமின் ஏ சத்து இந்தப் பழத்தில் அதிகம் உள்ளது. உடலுக்கும் மூளைக்கும் வலுவை அளிக்கும். தோலை மிருதுவாகவும், வழவழப்பாகவும் மாற்றும். நரம்புகளுக்கு உறுதியினைத் தரும். இரத்தத்தை விருத்தியாக்கும். பல் தொடர்பான நோய்களைப் போக்கும். தொற்றுக் கிருமிகளை அழிக்கும். இருப்பினும் இந்தப் பழத்தை அளவுக்கு அதிகம் சாப்பிட்டால் வயிறு மந்தமாகி வாந்தியும், வயிற்று வலியும் ஏற்படும். பெண்கள் மாதவிடாய் காலங்களில் இந்தப் பழத்தை சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

சுண்டைக்காய்

சற்றுக் கசப்பாக இருக்கும் இந்தக் காயில் உயிர்ச் சத்துக்களுடன், இரும்பு மற்றும் புரதச் சத்துக்கள் ஏராளமாக உள்ளன. பெரும்பாலானோர் மோரும் உப்பும் சேர்த்து அதில் சுண்டைக்காயை ஊற வைத்து சாப்பிடுவார்கள். காய வைத்து வற்றலாகவும் பயன்படுத்தலாம். உடல் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்கள் இந்தக் காயில் நிறைய உள்ளன. இந்தக் காயினை சாப்பிடுவதால், உடல் உறுதியடையும்.

மஞ்சள்

நாம் அன்றாடம் பயன்படுத்தும் மஞ்சள் பல்வேறு மருத்துவ குணங்கள் நிறைந்தது. உணவிலும் பெரும ளவு மஞ்சள் பயன்படுத்தப்படுகிறது. சர்வரோக நிவாரணியாகத் திகழும் மஞ்சளுக்கு பெண்களின் அழகினைக் காப்பதிலும் முக்கியப் பங்கு உள்ளது. ஒரு கிண்ணத்தில் 2 ஸ்பூன் கடலை மாவு எடுத்துக் கொண்டு, அதில் ஒரு சிட்டிகை மஞ்சள் சேர்த்து கலந்து சிறிதளவு தண்ணீர் கலந்து முகத்தில் பூசவும். அரைமணி நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் முகம் கழுவி வந்தால் சருமம் மென்மையாகும்.

விற்பனைக் கண்காட்சி

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் மகளிர் மேளா 2015 கோடைக் கொண்டாட்டம்

மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலுடன் செயல்படும் தமிழ்நாடு அரசு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. கிராம அங்காடிகள், கல்லூரி சந்தைகள் மற்றும் பல்வேறு கண்காட்சிகள் மூலமாக சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் பொருட்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிரின் முன்னேற்றத்திற்காக, அரசின் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த அனைத்து அரங்குகளையும் பார்வையிட்டு, அங்கிருந்த சுய உதவிக் குழு மகளிரிடம், அவர்கள் தயாரித்த பொருட்களின் விபரங்களைக் கேட்டறிந்தனர்.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திடும் நோக்கிலும், விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திடும் வகையிலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னையில் மாநில அளவில் பண்டிகை மற்றும் விடுமுறைக் காலங்களில் விற்பனைக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, இவ்வாண்டு கோடை விடுமுறையை முன்னிட்டு சென்னை, நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் 'மகளிர் மேளா 2015 கோடைக் கொண்டாட்டம் விற்பனைக் ககண்காட்சியினை' 17.04.2015 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக

வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள். மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத்துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் திருமதி. எஸ். கோகுல இந்திரா அவர்கள் சேர்ந்து குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பொருட்காட்சியில் அமைக்கப் பட்டிருந்த அனைத்து அரங்குகளையும் பார்வையிட்டு, அங்கிருந்த சுய உதவிக் குழு மகளிரிடம், அவர்கள் தயாரித்த பொருட்களின் விபரங்களைக் கேட்டறிந்தனர்.

இவ்விழாவில் மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் துறையின் சிறப்பு செயலாளர் திரு. எஸ். எம். விஜய் ஆனந்த், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் அரசு செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள் திரு. ட்டி. ஆர். வேதநாயகம், திருமதி. எம். மாதவி, புதுவாழ்வு திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா, திரு. ஆர். ராஜசேகரன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

17.04.2015 முதல் 17.05.2015 வரை நடைபெறும் இக்கண்காட்சியில், மாவட்டங்களில் மட்டுமே கிடைக்கக் கூடிய பிரத்யேகப் பொருட்களான கடலூர் முந்திரி, தருமபுரி புளி, திண்டுக்கல் ஜமுக்காளம், ஈரோடு கைத்தறி மற்றும் ஆயத்த ஆடைகள், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், கன்னியாகுமரி எம்பிராய்டரி துணிகள், கரூர் கைப்பைகள், கிருஷ்ணகிரி டெரகோட்டா பொருட்கள், மதுரை ஜிகிர்தண்டா, நாகப்பட்டினம் மூங்கில் பொருட்கள், நீலகிரி தேயிலை பொருட்கள், நாமக்கல் கைத்தறி துண்டுகள், பெரம்பலூர் ஸ்படிக மணி மாலைகள், புதுக்கோட்டை சிறு தானிய வகைகள், இராமநாதபுரம் பனை ஓலை பொருட்கள், சேலம் பருத்தி ஆடை வகைகள், சிவகங்கை புகழ் பெற்ற குத்து விளக்குகள், திருவண்ணாமலை ஆரணி காட்டன் சேலைகள், தஞ்சாவூர் பொம்மைகள், தேனி மெழுகுவர்த்திகள், திருவள்ளூர் காகிதப் பொருட்கள், திருநெல்வேலி பத்தமடை பாய்கள், திருச்சி குந்தன் நகை வகைகள், திருப்பூர் கைத்தறி துணி வகைகள், வேலூர் தோல் பைகள், விருதுநகர் சாராசேவு, விழுப்புரம் தரை விரிப்புகள் என தரமான பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது.

இந்தக் கண்காட்சியில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பிரசித்திப் பெற்ற பாரம்பரிய உணவு வகைகள், செட்டிநாட்டு பாரம்பரிய உணவுகள் சுவையாகவும் சுகாதாரமான முறையிலும் தயார் செய்து சுடச்சுட விற்பனை செய்யப்படுகிறது.

கோடையை சமாளிக்கும் விதமாக உடலுக்கு குளிர்ச்சியும் வலுவும் ஆரோக்கியமும் தரும் நுங்கு, இளநீர் போன்றவற்றில் தயார் செய்யப்படும் பானங்கள் உடனுக்குடன் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

சுய உதவிக் குழு மகளிரின் உற்பத்திப் பொருட்கள் தரமாகவும், நியாயமான விலையிலும் இருந்ததால் பொதுமக்கள் ஆர்வத்துடன் இக்கண்காட்சிக்கு வருகை தந்து தங்களுக்குத் தேவையானப் பொருட்களை பெருமளவில் வாங்கிச் செல்கின்றனர்.

தரமான வீட்டு உபயோகப் பொருட்கள், சத்து நிறைந்த நாவுக்கினிய உணவு வகைகள், கோடையை குளிர்விக்கும் இயற்கை பானங்கள் என மகளிர் மேளா 2015 கோடைக் கொண்டாட்டம் விற்பனைக் கண்காட்சி, மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளது.

சுற்றுலா போகலாம் வாங்க...

இயற்கை அழகு கொட்டிக் கிடக்கும் தமிழகத்தில், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் நாளும் வளர்ந்தோங்கி வருகிறது. 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்ற கவிதை வரிகளுக்கேற்ப பல்வேறு கலைகளும், வீர விளையாட்டுகளும் செழித்து நிற்கும் பூமியிது. வான்புகழ் வள்ளுவமும், நெஞ்சையள்ளும் காப்பியங்களும், சங்கத் தமிழ் மணக்கும் இலக்கியங்களும், உலகத்தோர் வியக்கும் ஆலயங்களும், இயற்கை படைத்த அற்புத தோற்றங்களும் நிறைந்தது நம் தமிழகம்.

பள்ளிகள் விடுமுறையும், கோடைக்காலமும் சேர்ந்து வரும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் சுற்றுலா செல்வது இன்று நம்மிடையே அதிகரித்து வருகின்றது. சுற்றுலா என்பது மனத்திற்கு உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் அளிக்க வல்லது. விருந்தோம்பல், நட்புறவு, பெருந்தன்மை ஆகியவற்றில் சிறந்து விளங்கி, வந்தாரை வாழ வைக்கும் தமிழகத்தில், அனைத்து மதத்தினரின் ஆன்மீகத் தலங்கள், அலைகள் தாலாட்டும் கடற்கரைகள், வனமும் வனப்பும் மிகுந்த மலைவாழிடங்கள், கடந்த காலத்தை கண்முன் கொண்டு வரும் வரலாற்று சிறப்பு பெற்ற இடங்கள் என ஏராளமானவை உள்ளன.

வரலாற்று கால சிறப்பிடங்கள்

தொன்மைப் புகழ் பெற்ற தமிழகத்தில் வரலாற்று தொடர்புடைய ஏராளமான இடங்கள் உள்ளன. கோட்டைகள், அரண்மனைகள், புகழ் பெற்ற கட்டிடங்கள், துறைமுகங்கள் என வரலாற்றில் இடம் பெற்றுள்ள இடங்கள் நிறைய உள்ளன.

சென்னை புனித ஜார்ஜ் கோட்டை, வேலூர் கோட்டை, தஞ்சை அரண்மனை, பூம்புகார், மதுரை திருமலை நாயக்கர் மகால், செஞ்சிக் கோட்டை, தருமபுரி அதியமான் கோட்டை, மேட்டூர் அணை, சங்ககிரிக் கோட்டை, நாமக்கல் மலைக்கோட்டை, பெரம்பலூர் ரஞ்சன்குடி கோட்டை, திருச்சி மலைக்கோட்டை, சிவகங்கை நகராத்தார் மக்களின் அழகிய மாளிகைகள், பாளையங்கோட்டை கட்டபொம்மன் கோட்டை, கன்னியாகுமரி பத்மநாபபுரம் அரண்மனை, உதயகிரிக் கோட்டை, வட்டக்கோட்டை போன்றவை உட்பட வரலாற்று சிறப்பு பெற்ற இடங்கள் ஏராளமாக உள்ளன.

அருள் தரும் ஆன்மீகத் தலங்கள்

அனைத்து மத மக்களும் போற்றும் வகையிலான ஆன்மீகத் தலங்கள் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நிறைந்து உள்ளன.

திருவேற்காடு மாரியம்மன் ஆலயம், மயிலாப்பூர் கபாலீசுவர் ஆலயம், சாந்தோம் சர்ச், ஆயிரம் விளக்கு மசூதி, காஞ்சி கைலாசநாதர் ஆலயம், ஏகாம்பரேஸ்வரர் சன்னதி, மகாபலிபுரம் கடற்கரை கோவில், திருத்தணி, திருவள்ளூர் வீரராகவ பெருமாள் கோவில், மதுரை மீனாட்சியம்மன் ஆலயம், திருப்பரங்குன்றம் முருகன் கோவில், திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் திருக்கோயில், சோளிங்கர் நரசிம்மர் கோவில், கோட்டை மசூதி, சிதம்பரம் நடராஜர் கோவில், தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம், அறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலை, மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி ஆலயம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயம், ஒசூர் சங்கசூடேஸ்வரர் மலைக்கோவில், கொல்லிமலை அறப்பளீஸ்வரர் கோவில், நாமக்கல் ஆஞ்சனேயர் ஆலயம், சேலம் ஜாமியா மசூதி, குழந்தை ஏசு பேராலயம், சுகவனேசுவர் ஆலயம், கோட்டை மாரியம்மன் கோவில், அழகிரிநாத பெருமாள் கோவில், வெண்ணங்கொடி முனியப்பன் ஆலயம், மருதமலை முருகன் கோவில், வெள்ளியங்கிரி மலைக் கோவில், மாசாணியம்மன் ஆலயம், சிறுவாச்சூர் மதுர காளியம்மன் கோவில், அரியலூர் கங்கைகொண்ட சோழபுரம் கோவில், ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா தேவாலயம் போன்றவை தமிழகத்தின் ஆன்மீகத் தலங்களாகும். மேலும் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி ஆலயம், திருச்சி உச்சிப்பிள்ளையார் கோவில், திருவரங்கம், திருவானைக்காவல், வயலூர், உறையூர், புனித ஜோசப் தேவாலயம், நாதிர்ஷா தர்க்கா, பழனிமலை முருகன் கோவில், குன்றக்குடி முருகன் கோவில், பிள்ளையார்பட்டி, வேளாங்கன்னி மாதா தேவாலயம், நாகூர் தர்க்கா, வைத்தீஸ்வரன் கோவில், திருக்கடையூர், திருவாரூர் தியாகேசுவரர் ஆலயம், தேனி கோட்டை மாரியம்மன், திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயம், டிரினிடி கதீட்ரல் தேவாலயம், ஆத்தங்கரை பள்ளிவாசல், திருச்செந்தூர், மணப்பாடு தேவாலயம், கன்னியாகுமரி அம்மன் ஆலயம், பீர்முகமது தர்க்கா, சுசீந்திரம் தாணுமலயசுவாமி ஆலயம் போன்ற எண்ணற்ற ஆன்மீகத் தலங்கள் தமிழகத்தில் நிறைந்துள்ளன.

மலைவாழிடங்கள்

வான்முட்டும் மலை முகடுகள், வனப்பு தரும் தாவரங்கள், வளைந்தோடும் நதிகள், ஆர்ப்பரித்து கொட்டும் அருவிகள், கொஞ்சி விளையாடும் பறவையினங்கள், அஞ்சி ஓடும் விலங்கினங்கள் என இயற்கை அழகு கொட்டிக்கிடக்கும் தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகள் காண வேண்டிய மலைவாழிடங்களும் ஏராளமாக உள்ளன.

திருவண்ணாமலை போரூர் பருவதமலை, ஏலகிரி, தீர்த்தமலை, தேன்கனிக்கோட்டை, ஏற்காடு, டாப்சிலிப், ஆனைமலை, வால்பாறை, மலைகளின் அரசி என்று அழைக்கப்படும் நீலகிரி, முதுமலை, கோத்தகிரி, கொல்லிமலை, லாடபுரம் பச்சை மலைக்குன்றுகள், திருச்சி மலைக்கோட்டை, கொடைக்கானல், தேனி மேகமலை என காண வேண்டிய மலைவாழிடங்கள் தமிழ க த்தில் நிறைய உள்ளன.

அருவிகள் நிறைந்த தமிழகம்

உயர்ந்த மலைகளின் இடையே தவழ்ந்து வரும் அருவிகளைக் காணவும், அவற்றில் நீராடி மகிழவும் அனைவரும் விரும்புவர். நம் தமிழகத்தில் ஜலகம்பாறை அருவி, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி, ஏற்காடு கிள்ளியூர் அருவி, ஆழியாறு குரங்கு அருவி, சிறுவாணி அருவி, நீலகிரி பைகாரா நீர்வீழ்ச்சி, கொல்லிமலை ஆகாச கங்கை நீர்வீழ்ச்சி, கும்பக்கரை மற்றும் சுருளி அருவிகள், குற்றால அருவி, திற்பரப்பு அருவி, பாபநாசம் அகத்தியர் அருவி, பாணதீர்த்த அருவி போன்ற அருவிகள் பாய்ந்தோடி வரும் பெருமை பெற்றது நம் மாநிலம்.

அலைகள் தாலாட்டும் கடற்கரைகள்

அழகிய கடற்கரைகளையும், அதைச்சார்ந்த பகுதிகளும் சுற்றுலாப் பயணிகளை கவரும் இடங்களாகும். நம் தமிழகத்திலும் அழகிய கடற்கரைகள் உள்ளன. அவைகளைக் காண ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். சென்னை மெரினா கடற்கரை மிகவும் புகழ் பெற்றதாகும். பல்லவர்களின் துறைமுகமாக விளங்கிய மாமல்லபுரம், கோவளம், பூம்புகார், இராமேஸ்வரம், தனுஷ்கோடி, நாகப்பட்டினம், தூத்துக்குடி, உவரி, கன்னியாகுமரி, முட்டம், செத்தவிளை, சங்குத்துறை போன்ற கடற்கரைகள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களாகும்.

பறவைகள் மற்றும் விலங்குகள் சரணாலயங்கள்

கிண்டி சிறுவர் பூங்கா, வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், மாமல்லபுரம் முதலைப் பண்ணை, வேலூர் அமிர்தி விலங்கியல் பூங்கா, பிச்சாவரம் சுரபுன்னை காடுகள், ஆனைமலை மற்றும் முதுமலை விலங்குகள் சரணாலயம், முக்குர்த்தி தேசியப் பூங்கா, அரியலூர் கரைவெட்டி பறவைகள் சரணாலயம், திருநெல்வேலி கூந்தன் குளம் பறவைகள் சரணாலயம், முண்டந்துறை, களக்காடு விலங்குகள் சரணாலயம் ஆகியவை சுற்றுலாப் பயணிகள் அதிகம் கான வேண்டிய இடங்களாகும்.

மேற்கண்டவைகள் மட்டுமின்றி சென்னை வள்ளுவர் கோட்டம், கலங்கரை விளக்கம், குமரிக் கடல் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் மண்டபம் மற்றும் வான்புகழ் வள்ளுவர் சிலை, மாமல்லபுரம் பஞ்சபாண்டவர் ரதங்கள், புலிக்குகை, முட்டுக்காடு படகு குழாம், சாத்தனூர் அணை, திருச்சி கல்லணை, முக்கொம்பு, மேட்டூர் அணை, நீலகிரி தொட்டபெட்டா சிகரம், சிம்ஸ் பூங்கா, பெரம்பலூர் சோழகங்கம் ஏரி, பாம்பன் பாலம், மதுரை வைகை அணை, வண்டியூர் தெப்பக்குளம், கொடைக்கானல் தூண் பாறைகள், தேனி முல்லைப் பெரியாறு, வைகை மற்றும் பேச்சிப்பாறை நீர்தேக்கங்கள், திருவள்ளூர் செம்பரப்பாக்கம், பழவேற்காடு, புழல் நீர்தேக்கம், நெல்லை மணிமுத்தாறு அணை போன்ற இடங்கள் அனைத்தும் சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கமாக தமிழகத்தை உருவாக்கி வைத்துள்ளன.

எனவே வாசகர்களே கோடை விடுமுறையைக் கொண்டாடும் வண்ணம் குடும்பத்தினருடன் சுற்றுலாச் சென்று, வரலாற்று புகழ் பெற்ற இடங்களையும், மலைவாழிடங்களையும், ஆன்மீக ஆலயங்களையும், அருவிகளையும், காடுகளையும் கண்டு மகிழ்ந்திடுங்கள். புத்துணர்வு பெற்றிடுங்கள்.

தினம்... தினம்...

உலக செஞ்சிலுவை தினம் (மே 8)

முதலாம் உலகப் போரிக்குப் பின்னர் நாடுகளிடையே சமாதானத்துக்கான தேவை உணரப்பட்டது. செக்கோஸ்லவாக்கியாவில் சமாதானத்தை வலியுறுத்தி 1922இல் ஈஸ்டர் திருநாளுக்காக மூன்று நாள் யுத்த நிறுத்தத்திற்கான வேண்டுகோள் விடப்பட்டது. இதுவே பின்னர் செஞ்சிலுவை நாளாக கடைபிடிக்கத் தூண்டுதலாக அமைந்தது எனலாம்.

1934ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற செஞ்சிலுவைச் சங்கத்தினரின் 15வது அனைத்துலக மாநாட்டில் இது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இருப்பினும் 1948ஆம் ஆண்டிலேயே இந்நாளை செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தவரான ஹென்றி டியூனண்ட் அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் கொண்டாடும் தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும் பின்னர் பல மாற்றங்களுக்குள்ளாகி 1984இல் இருந்து இந்நாள் உலக செஞ்சிலுவை நாள் என அழைக்கப்படுகிறது. ■

அன்னையர் தினம் (மே 10)

உலகம் முழுவதும் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை தாய்மையைப் போற்றக்கூடிய வகையில் 'அன்னையர் தினம்' கொண்டாடப்பட்டு வருகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த சமூக சேவகியான ஜார்விஸ் என்ற அம்மையாரின் மகளான அன்னா ஜார்விஸ், வருடத்தில் ஏதாவது ஒரு நாளில் எல்லோரும் தங்களது தாயை அவர் உயிரோடு இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அவரது தியாகத்தையும் தங்களுக்கு அவர் செய்த ஈடு இணையற்ற பணியையும் நினைத்து அவரை கௌரவிக்க வேண்டும் என்று விரும்பினார்.

இவரது கோரிக்கையை ஏற்று பென்சில்வேனியா மாகாண அரசு 1913ஆம் ஆண்டு முதல் அன்னையர் தினத்தை அங்கீகரித்தது. அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன், ஆண்டுதோறும் மே மாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையை அதிகாரப்பூர்வமாக அன்னையர் தினமாகவும், அன்று விடுமுறை தினமாக கடைபிடிக்க வேண்டும் எனவும் 1914ஆம் ஆண்டு அறிவித்தார். அவரின் வேண்டுகோளினை ஏற்று ஆண்டுதோறும் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை உலகம் முழுவதும் அன்னையர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தில் அன்னையரைப் போற்றி வணங்கிட வேண்டும். ■

அன்னையரின் ஈடு இணையற்ற தியாகத்தினைப் போற்றி அவர்களைக் கௌரவிக்க வேண்டும்.

உலக புகையிலை எதிர்ப்பு தினம் (மே 31)

மனித உயிர்களுக்கு இறப்பை அளிக்கும் இரண்டாவது முக்கிய காரணியாக புகையிலை உள்ளது என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. புகையிலை என்றதும் நினைவிற்கு வருவது சிகரெட். இதில் உள்ள நிக்கோடின் என்ற நச்சுப் பொருள்தான், புகைப்பவர்களை அடிமையாக்குவதுடன், அவர்களின் உடல் நலத்தையும் பாதிக்கும் வகையில் பல்வேறு நோய்களை உருவாக்குகிறது.

ஒரு சிகரெட்டில் 4 ஆயிரம் வேதிப்பொருட்கள் கலந்துள்ளன. இவற்றில் 43 பொருட்கள் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடியவை. புற்றுநோய் ஏற்படும் காரணங்களில் புகையிலைக்கு 70 சதவீதம் பங்குள்ளது. இந்தியாவில் அதிகம் பேர் சிகரெட், பீடி மற்றும் வாய்க்குள் சுவைக்கும் புகையிலையால் பாதிக்கப்படுகின்றனர்.

புகைப்பிடிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக உலக சுகாதார நிறுவனத்தால் 1987ஆம் ஆண்டு முதல் மே 31ஆம் தேதி சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

புகைப்பதால் புகைப்பவர்களை விட அருகில் உள்ளவர்கள்தான் அதிகம் பாதிப்பிற்குள்ளாகின்றனர் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே உடலுக்கும், உயிருக்கும் பாதிப்பை தரும் புகையிலை பயன்படுத்துவதைத் தவிர்த்திட இந்த நாளில் உறுதி ஏற்றிடுவோம்.

பொருளாதார வளர்ச்சி தந்த திட்டம்

மாற்றுத் திறனாளியான

தனக்கு மாதந்தோறும் நிரந்தர வருவாய் கிடைக்க உதவிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு ராஜரத்தினமும் அவர் மனைவியும் தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

நீலகிரி மாவட்டம், மேல்குந்தா ஊராட்சி அம்பேத்கார் நகர் பகுதியில் வசித்து வருபவர்கள் ராஜரத்தினம் – சௌபாக்கியவதி தம்பதியினர். மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் கூலி வேலைக்குச் சென்று குறைவான வருவாய் பெற்று வந்தனர். இந்நிலையில் சர்க்கரை நோயால் ராஜரத்தினத்தின் கால்கள் பாதிக்கப்பட்டதால் அவர் வேலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. தனது மனைவி சௌபாக்கியவதியை சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இணைத்து, அதன் மூலம் ஏதாவது தொழில் செய்யலாம் என ராஜரத்தினம் நினைத்தார். உடனே அப்பகுதியில் உள்ள பெண்களிடம் பேசி 13 பெண்களை குழுவாக இணைத்து ரோஜா மலர் மகளிர் சுய உதவிக் குழு தொடங்கப்பட்டது. சுழல் நிதியாக ரூ. 60,000/– பெற்று, அதைக் கொண்டு குழுவின் உறுப்பினர்கள் சிறு தொழில்களை துவங்கினர். பின்னர் ரூ. 5 இலட்சம் வங்கிக் கடன் பெற்று, குழுவின் உறுப்பினர்கள் தனித்தனியாக தேயிலைத் தோட்டத்தை குத்தகைக்கு எடுத்து அதன் மூலம் வருவாய் ஈட்டத் தொடங்கினர். இச்சமயத்தில் அப்பகுதியில் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் வாயிலாக கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்டது. மாற்றுத் திறனாளிகள் பட்டியலில் இடம் பெற்றிருந்த ராஜரத்தினம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் தனக்கு கடனுதவி செய்யும்படி விண்ணப்பித்தார். அவரின் மனைவி சௌபாக்கியவதி ரோஜா மகளிர் குழுவில் உறுப்பினராக உள்ளதால் ராஜரத்தினத்திற்கு ரூ. 10,000/– கடனுதவி வழங்கப்பட்டது. இத்தொகையைக் கொண்டு ராஜரத்தினம் மளிகைக் கடை ஒன்றினை சிறிய அளவில் துவக்கினார். தற்போது இந்த மளிகைக் கடையின் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 500/–க்கும் குறையாமல் இலாபம் ஈட்டுகிறார்.மாற்றுத் திறனாளியான தனக்கு மாதந்தோறும் நிரந்தர வருவாய் கிடைக்க உதவிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு ராஜரத்தினமும் அவர் மனைவியும் தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

தூத்துக்குடி

சாதிக்க வயது தடையில்லை...

தூத்துக்குடி நகரில் இயங்கி வரும் சுயம்சித்தா அன்னை விடியல் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினரான திருமதி. ஹேமலதா, 2009ஆம் ஆண்டு முதல் தேசிய மற்றும் மாநில அளவில் ஆண்டுதோறும் நடைபெறும் மூத்தோர் தடகளப் போட்டிகளில் கலந்து கொண்டு இதுவரை 6 தங்கம், 5 வெள்ளி மற்றும் 1 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளார். உயரம் தாண்டும் போட்டியில் தொடர்ந்து 5 முறை முதலிடம் பெற்றுள்ளார். சென்ற ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெற்றிருந்தார். இவரின் திறனைப் பாராட்டி தடகள சங்கத் தலைவர் திரு. தேவாரம் அவர்கள் பரிசுகள் வழங்கி ஊக்குவித்துள்ளார். சுய உதவிக் குழுவின் உறுப்பினரான திருமதி. ஹேமலதா மேலும் பல வெற்றிகளைப் பெற்று சாதனை படைக்க வாழ்த்துவோம்.

கடலூர்

கீற்று முடைவோருக்கு உற்ற துணையான ஊரக வாழ்வாதார இயக்கம்

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டாரம், அனுக்கம்பட்டு ஊராட்சியில் வசித்து வரும் இருளர் இனத்தைச் சேர்ந்த 72 பழங்குடியினர் குடும்பங்களுக்கென, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் ஒரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் கீற்று முடையும் தொழில் ஈடுபட்டுள்ள 30 குடும்பங்களை ஒருங்கிணைத்து, ஒத்த தொழில் குழு தொடங்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் செயல்பாடுகளை கடலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. பூ. காஞ்சனா அவர்கள் பார்வையிட்டு, ஒத்த தொழில் குழுவின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு, உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் தேவையான உதவிகளும் செய்து தரப்படும் என்று தெரிவித்தார்.

கழிவறை உபயோகமே, வாழ்க்கைக்கு ஆரோக்கியமே...!

கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்!

தமிழகத்தை திறந்தவெளி மலம் கழிக்கும் பழக்கமற்ற மாநிலமாக ஆக்குவதற்கு அனைத்து பங்கேற்பாளர்களையும் ஒருங்கிணைத்து, மக்கள் இயக்கமாக உருவாக்க அரசு உறுதிபூண்டுள்ளது.

சுகாதாரத்தைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி, அவர்கள் கழிப்பறைகள் கட்டவும், பயன்படுத்தவும், நேரடி தகவல் தொடர்பு முறை ஏனைய ஊடக வழிகளைக் காட்டிலும் சிறந்தது. எனவே கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் ஆகிய நீங்கள், திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமங்களை உருவாக்கும் நோக்கத்தினை அடைவதற்கான விழிப்புணர்வினை பெரிய அளவில் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருக்கிறீர்கள். அதனடிப்படையில் சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்திட கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்திட அரசு முடிவெடுத்து கீழ்க்கண்ட முக்கிய பொறுப்புகளை வழங்கியுள்ளது.

1. கழிப்பறை இல்லாத வீடுகள் / பயன்பட்டில் இல்லாத கழிப்பறைகள் குறித்த விவரங்கள் அடங்கிய பதிவேட்டினை பராமரித்தல் மற்றும் ஊராட்சி செயலரால், ஊராட்சி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் முதன்மை பதிவேட்டினை அவ்வப்போது மேம்படுத்திட (Updating) ஊராட்சி செயலருக்கு உதவுதல்.
2. சுத்தம், சுகாதாரம், கழிப்பறை கட்டுதல் மற்றும் அதனைப் பயன்படுத்துதல் குறித்து வீட்டுக்கு வீடு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
3. கழிப்பறைகளைப் பயன்படுத்தாததால் ஏற்படும் அருவருப்பு மற்றும் அவமானம் குறித்தும், அதனால் ஏற்படும் உடல் நலத் தீங்குகள் குறித்தும் வீட்டில் குடியிருப்பவர்களிடம் எடுத்துரைத்தல்.
4. கழிப்பறைகள் கட்ட அரசு திட்டங்கள் மூலம் அளிக்கப்படும் உதவித் தொகைகள் குறித்த புரிதலையும், அதனைப் பெற்றுத் தரவும், பயனாளிகளுக்கு உதவுதல் மற்றும் பெற்றுத் தருதல்.
5. குக்கிராம அளவில் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்ட ஒட்டுமொத்தமாகத் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் அதன் பயன்பாட்டினைக் கண்காணித்தல்.
6. தரமான கட்டுமானப் பொருட்கள் மற்றும் திறன் வாய்ந்த கொத்தனார்கள் கிடைக்க பயனாளிகளுக்கு உதவுதல்.
7. உரிய நேரத்தில் தாமதமின்றி பயனாளிகளுக்கு மானியம் விடுவிக்கப்படுவதைக் கண்காணித்தல்.
8. அடிக்கடி தொடர்பு மற்றும் தொடர் பார்வையிடல் மூலம் கழிப்பறை பயன்பாட்டினை உறுதி செய்தல்.

வீட்டிற்கு ஒரு கழிப்பிடம் கட்டுவதால்,

1. நோய்களிலிருந்து விடுதலை
2. தன்மானம் காக்கப்படுகிறது
3. வன விலங்குகளிடமிருந்து பாதுகாப்பு
4. வீதி எங்கும் சுத்தம்
5. உற்றார் உறவினர்கள் மத்தியில் மதிப்பு
6. மருத்துவச் செலவு மிச்சம்
7. நடு இரவிலும், மழைக் காலங்களிலும் உபயோகிக்க வசதி
8. சுய சுத்தம், சுகாதாரம், பாதுகாப்பு

கழிப்பறை கட்டுவதற்குத் தகுதியான பயனாளிகளுக்கு அரசு ரூ. 12,000/- மானியம் வழங்குகிறது. ஒவ்வொரு கழிப்பறை கட்ட ஊக்குவிக்கும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூ. 300/- ஊக்க நிதி வழங்கவும் அரசு அனுமதித்துள்ளது. மேலும், ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு நேர்முக தகவல் பரிமாற்ற செயல்முறைகளுக்கு மற்றும் இதர செலவினத்திற்காக ஒருமுறை ஒதுக்கீடாக ரூ. 10,000/- வழங்கவும் அரசு ஆணையிட்டுள்ளது.

ஒரு குடியிருப்பானது எப்போது திறந்தவெளி மலம் கழிக்கப்படாத நிலையை அடைகிறதோ, அப்போது கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அவர்களது பணியை அங்கீகரித்து பாராட்டும் வகையில் விருதுகள் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சுகாதாரம் குறித்த மேற்கண்ட தகவல்களை உங்கள் பகுதியில் இருக்கும் கழிப்பறை இல்லாத அல்லது கழிப்பறை இருந்தும் பயன்படுத்தாத ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் எடுத்துரைத்து, அரசு அறிவித்துள்ள இந்த மாபெரும் திட்டத்தினை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றிட உங்களது மேலான ஒத்துழைப்பை நல்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இயக்குனர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

பூக்கள்

மனநலம் குறித்த விழிப்புணர்வினை அனைவரும் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், புதுவாழ்வு திட்டம் சார்பில் இயற்றப்பட்ட இரண்டு நாடகங்கள் முற்றம் இதழில் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. கடந்த இதழ்களில் முற்றத்தில் இடம் பெற்ற நாடகத்தின் தொடர்ச்சியினை இந்த இதழில் காணலாம்.



டீவியில் தொடர்ந்து செய்திகள் வாசிக்கப்படுகிறது.

15 வயது பள்ளிச் சிறுமி திருமணம் செய்ய கட்டாயப்படுத்தியதால் இரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டாள்.

விருதுநகரில் வீட்டுப் பாடம் எழுதிக் கொண்டு வராத மாணவனை ஆசிரியர் தண்டித்ததால், மாணவன் தற்கொலை செய்து கொண்டான்.

கடலூரைச் சேர்ந்த பொப்பனூர் கிராமத்தில் அதிக மதிப்பெண் பெறாத சிறுமியை பெற்றோர்கள் திட்டியதால் வீட்டை விட்டு வெளியேற்றம்

இதுபோன்ற நிகழ்வுக்கு யார் காரணம் என்பதையும், இதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் கூற எமது நிலையத்திற்கு வந்திருக்கும் மனநல ஆலோசகரை கேளுங்கள்.

அம்மா : ஏங்க குழந்தைகளைப் பத்தி ஏதோ சொல்லுறாங்களே... கேளுங்க... கொஞ்சம் சத்தமா வையுங்களேன்.

அப்பா : சரி கத்தாத... மனநல ஆலோசகர் டீவியில பேசுறாரு.

மனநல ஆலோசகர் : பொதுவா குழந்தைகள் எந்த ஒரு பிரச்னையானாலும் மனதளவுல சீக்கிரமா பாதிக்கப்படுறாங்க. பெற்றோர்கள் குழந்தைகளோட அன்றாட செயல்பாடுகள்ல ஏதாவது மாற்றம் இருந்ததுன்னா உடனே குழந்தைகள் கிட்ட அவங்க பள்ளிக்கூடத்துல ஏதாவது பிரச்னை இருக்குதா? இல்ல வேற ஏதாவது இருக்கான்னு பாக்கணும். அந்தக் குழந்தைக்கு தேவையான உதவிகள் செய்யணும். அப்புறம் மனநல மருத்துவரை அணுகி அந்தக் குழந்தைக்கு முறையான ஆலோசனை கிடைப்பதற்கு உதவி செய்யணும். அதுக்கு நம்ம ஊரு பக்கத்துல இருக்கிற அரசு மருத்துவமனையை அணுகனும்.

(மருத்துவமனையில் மனநல மருத்துவரை அணுகுதல்)

அம்மா : டாக்டர் அம்மா நீங்கதான் என் பொண்ண எப்படியாவது காப்பாத்தணும். பத்து நாளைக்கு மேல என் பொண்ணு சரியா சாப்பிடறதில்ல. தூங்குறதில்லை. துணிமணி கூட மாத்துறதில்ல. புள்ளைங்க கூட விளையாடுறதில்லை, எப்ப பார்த்தாலும் தனியாவே உம்முனு படுத்துட்டே கிடக்கிறா.

டாக்டர் : பத்து நாளா உன் பொண்ணு இப்படி இருக்கா... நீங்க எங்கேயும் போயி பார்க்கலயா?

அம்மா : நாங்க எங்க ஊருல பூசாரிகிட்ட கூட்டிட்டு போனோம். அவரு ஆடு வெட்டணும். கோழி வெட்டணும். ஐந்து ஆயிரம் காணிக்கை கொடுக்கணும்னு சொல்லி என் புள்ளய அடியோ அடியுனு அடிச்சி, எம்புள்ள உடம்ப புண்ணாக்கினதுதான் மிச்சம்.

டாக்டர் : உங்களுக்கு மருத்துமனைக்கு கூட்டிட்டு வரணும்னு தெரியாதா? அங்க போனோம், இங்க போனோம்னு சொல்றீங்க, பூசாரிக்கிட்ட கூட்டிட்டு போறது தப்புனு தெரியாதா? சரி வெளியில் இருங்க. உங்க புள்ளய பாத்துட்டு சொல்றேன்.

(இளவரசிக்கு மருத்துவர் ஆலோசனை கூறுதல்)

டாக்டர் : இத பாருங்கம்மா, இந்தப் பொண்ணுக்கு பயப்படற மாதிரி ஒன்னும் இல்ல. ஒவ்வொரு குழந்தையும் ரொம்ப நுட்பமானவங்க, மென்மையானவங்க. சின்ன செய்தியைக் கூட தாங்கற மனநிலை இல்லாதவங்க. அதுபோலத்தான் உங்க பொண்ணு ஓடும் போது கீழ விழுந்துட்டா. அதப் பார்த்து எல்லோரும் சிரிச்சதால மனம் பாதிக்கப்பட்டிருக்கா. ஒரு சின்ன பாதிப்பாயிருக்கு. இது நடக்காம இருக்கணுமுன்னா டீச்சர் மறுபடியும் ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கணும். இது மாதிரி ஒவ்வொரு ஆசிரியரும் பெற்றோரும் குழந்தைக்கிட்ட ஒரு சின்ன மாற்றம் தெரிந்தாலும் உடனடியா கவனிக்க வேண்டும். பெற்றோர்களை விட ஆசிரியர்களிடம் தான் குழந்தைகள் அதிக நேரம் இருக்காங்க. அதனால ஆசிரியர்கள் அதிக கவனம் செலுத்தணும்.

(தொடரும்)

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
INTERNATIONAL FUND FOR AGRICULTURAL DEVELPMENT

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தில் சமுதாய வள ஆதார பணியாளர்கள்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்பாட்டில் உள்ள 109 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பணிகளை மேம்படுத்துவதற்கு இத்திட்டத்தின் மூலம் 188 சமுதாய வள ஆதார பணியாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

இந்த சமுதாய வள ஆதாரப் பணியாளர்கள் கூட்டமைப்புகள் மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் சிறப்பான செயல்பாட்டிற்காக கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வர். கூட்டமைப்புகளினால் செயல்படுத்தப்பட்டு வரும் பழைய குறுந்தொழில்கள், கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலம் செயல்பட்டு வரும் குறுந்தொழில்கள் ஆகியவற்றுக்கு தக்க ஆலோசனைகளை வழங்கி வழிநடத்தல், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் வரவு செலவு கணக்குகள் மற்றும் பிற கணக்குகள் குறித்த Tally கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளுதல், பதிவேடுகள் பராமரித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். மேலும், சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஆயுள் காப்பீடு, சொத்துக் காப்பீடு, மருத்துவக் காப்பீடு மற்றும் கால்நடை காப்பீடு போன்றவற்றில் இணைத்தல், கூடுதல் வருமானம் பெருக்கும் தொழில் திட்டங்கள் தயாரிப்பதில் உதவி புரிதல், பொருட்களை சந்தைப்படுத்துதல், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன்கள் பெற்றுத் தருவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளுதல், வருடாந்திர வரவு செலவுக் கணக்கு (Auditing) மற்றும் வரவு செலவு திட்டம் தயாரித்தலில் ஈடுபடுதல், கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்குத் தேவையான அனைத்துப் பயிற்சிகளுக்கும் ஏற்பாடு செய்தல் போன்ற செயல்பாடுகளை சமுதாய வள ஆதாரப் பணியாளர்கள் மேற் கொள்வார்கள். சமுதாய வள ஆதாரப் பணியாளர்களுக்கு இவை தொடர்பான முதல் கட்ட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பல கட்டங்களாக விரிவான பயிற்சிகள் அளிக்க முடிவு செய்யப் பட்டுள்ளது.

கூட்டமைப்புகள் மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலம் செயல்பட்டு வரும் குறுந்தொழில்கள் ஆகியவற்றுக்கு தக்க ஆலோசனைகளை வழங்கி வழிநடத்தல், ஊராட்சி அளவிலான வரவு செலவு கணக்குகள் வீழியியீ கணக்குப் பதிவுகளை மேற் கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்
திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

கடலோர கிராமங்களில் வெட்டிவேர் சாகுபடி

கடலூர் மாவட்டத்தில் உள்ள கடற்கரையோர கிராமங்களான நொச்சிக்காடு, தியாகவல்லி, நடுத்திட்டு, சொத்திக்குப்பம், வாண்டியாம்பள்ளம், ரெட்டியார்பேட்டை, சி. புதுப்பேட்டை போன்ற இடங்களில் வெட்டிவேர் சாகுபடி அதிகமாக நடந்து வருகிறது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம், கடலூர் மாவட்டத்தில் திருச்சோபுரம் கூட்டு வள மையத்திற்கு உட்பட்ட சுமார் 10 கிராமங்களில் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் வெட்டிவேர் சாகுபடி செய்து வருகின்றனர்.

நொச்சிக்காடு ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் உள்ள அன்பு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களாக உஷா, கலா, அல்லி ஆகியோர் கூறுகையில், 'நாங்கள் மூவரும் ஒன்றிணைந்து தொழில் செய்ய அங்காளம்மன் கூட்டு பொறுப்புக் குழு (JLC) என்ற பெயரில் வங்கிக் கணக்கு துவங்கி செயல்பட்டு வருகிறோம். இதில் எங்கள் JLCக்கு NABFINS வங்கி மூலம் ரூ. 1,21,125/-ம், IFAD Assisted PTSLP மூலம் ரூ. 40,375/-ம், எங்களுடைய பங்களிப்பாக ரூ. 8,500/-ம் ஆக மொத்தம் ரூ. 1,70,000/-ஐ கொண்டு வெட்டிவேர் சாகுபடி தொழில் செய்து வருகிறோம்.

இதில் 2 ஏக்கர் நிலம் 3 வருட காலத்திற்கு ரூ. 20,000/-க்கு குத்தகைக்கு எடுத்து, அந்த நிலத்தை சீர் செய்து, வேலி அமைத்து, குழாய் கிணற்றில் மோட்டார் அமைத்து புல்கரணைகளை நட்டு பயிர் செய்து வருகிறோம்.

எங்கள் நொச்சிக்காடு கிராமத்தில் வெள்ளை மணல் பரப்பு அதிகமாக உள்ளது. வெண்ணை மணல் விவசாயத்திற்கு பயனற்றதாக கருதப்படுவதால் இந்த இடங்களை கேரள மாநிலத்தைச் சேர்ந்த பல நிறுவனங்கள் குறைந்த விலைக்கு வாங்கி வெட்டிவேர் சாகுபடியை வெற்றிகரமாக செய்து வந்தனர். அந்த நிலங்களில் வெட்டிவேர் செழித்து வளர்ந்து இலாபம் கொடுத்ததைக் கண்டு உள்ளூர் வியாபாரிகளும் வெட்டிவேர் சாகுபடி செய்து, 1 ஏக்கருக்கு 2 இலட்சம் ரூபாயை இலாபமாகப் பெற்றனர்.

வெட்டிவேர் ஒரு வருடப் பயிர் என்றாலும், 8 மாதத்திலிருந்தே பயன் தரக் கூடியது. இப்பயிரில் வேர்தான் மகசூலாகக் கிடைக்கிறது. 1 டன் வெட்டிவேர் 1 லட்சம் ரூபாய்க்கு விற்பதால் இந்த ஆண்டில் ஏராளமானவர்கள் வெட்டிவேர் சாகுபடி செய்துள்ளனர். கடற்கரையோரம் என்பதால் தண்ணீரை தேக்கி வைக்க முடியாது. இதனால் 20 அடி ஆழத்துக்கு குழாய் கிணறு தோண்டி நேரடியாக மோட்டார் மூலம் தண்ணீர் இறைக்கிறோம். தண்ணீரை நேரடியாகப் புல்லுக்குப் பாய்ச்சினால் நீர் வீணாவதால் பைப் லைன் மூலம் தெளிப்பு பாசனம் செய்து வருகிறோம்.

எங்கள் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் உள்ள உறுப்பினர்களுக்கு நிதி உதவி செய்திடவும், எங்களுக்கு தக்க நேரத்தில் நிதி வழங்கி உதவிய அனைவருக்கும் எங்களுடைய மன மார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

வெட்டிவேர் சாகுபடி செய்ய வெட்டி வேரின் அடிப்பகுதியை 3 அங்குலம் நீளத்துக்கு வெட்டி எடுத்து, அவற்றிற்கு 1 வாரத்திற்கு தண்ணீர் தெளித்து வர வேர்கள் முளைத்து வந்து விடும். அதனை நிலத்தில் நடவு செய்ய வேண்டும். ஓரிரு மாதங்கள் கழித்து வளர்ந்து வரும் புல் பகுதியை வெட்டி விட்டால், வேர்கள் நன்றாக தளைத்து வரும். பின்னர் 8 மாதத்திலிருந்து 12 மாதத்திற்குள் பொக்லைன் இயந்திரம் மூலம் புல் கரணைகளை அறுவடை செய்து வேர் மற்றும் அடிப்பகுதிகளை பிரித்து எடுக்கின்றனர். இதனை வாசனை திரவியங்கள் தயாரிக்க மதுரை, நாமக்கல், கோவை போன்ற ஊர்களில் இருந்து வருகின்ற ஏஜெண்டுகள் மூலம் விற்பனை செய்கின்றோம். 1 ஏக்கர் நிலத்தில் 4 டன் வெட்டிவேர் கிடைக்கிறது. முதல் தரம் 1 டன் ரூ. 3 இலட்சம் வரை விலை போகிறது. இதனால் எங்களுக்கு குறைவான முதலீட்டில் அதிகமான இலாபம் கிடைக்கிறது. எங்கள் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் உள்ள உறுப்பினர்களுக்கு நிதி உதவி செய்திடவும், எங்களுக்கு தக்க நேரத்தில் நிதி வழங்கி உதவிய அனைவருக்கும் எங்களுடைய மன மார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

தொழில்பயிற்சிகள் மூலம் புதிய வேலைவாய்ப்புகள்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கடலோர பகுதிகளில் உள்ள வேலையற்ற இளைஞர்களைக் கண்டறிந்து, அவர்களின் தகுதி அடிப்படையில் தொழில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தி தரப்பட்டு வருகிறது. அதன் கீழ் 2014-15ம் வருடம் கன்னியாகுமரி மாவட்டத்தில் தரமான கல்வியளித்து வரும் கிரேஸ் சமுதாய கல்லூரியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு மாணவர் சேர்க்கை ஆரம்பித்தது.

தூத்தூர், பைங்குளம், மிடாலம் ஆகிய ஊராட்சிகளிலிருந்து 18 முதல் 35 வயதிற்குட்பட்ட படித்து முடித்துவிட்டு வேலையில்லாத ஆண்கள் மற்றும் பெண்கள் 33 பேர் தேர்வு செய்யப்பட்டு, அதில் Diploma in Lab Technicianயில் 10 பேரும், Diploma in Radio Technology யில் 3 பேரும், Health Assistant படிப்பிற்கு 20 பேரும் சேர்ந்து இலவசமாக பயிற்சி பெற்று வருகின்றனர். இந்த பயிற்சிக்கான கட்டணங்கள், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தினால் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பயிற்சிகளின் விபரம்

வ. எண்.	பயிற்சி வழங்கப்படும் விபரம்	மாணவர்களின் எண்ணிக்கை	பயிற்சிக் காலம்	பயிற்சிக்கான தொகை (மாணவர் ஒருவருக்கு)
1	JCB & Forklift	19	2 மாதங்கள்	ரூ. 15,000/-
2	JCB & Pocline	30	2 மாதங்கள்	ரூ. 15,000/-
3	நர்சிங் மற்றும் லேப் டெக்னீஷியன்	61	12 மாதங்கள்	ரூ. 13,000/-
4	டிரைவிங்	18	2 மாதங்கள்	ரூ. 6,500/-
5	வெல்டிங்	16	1 மாதம்	ரூ. 17,100/-
6	எலக்ட்ரீஷியன்	27	1 மாதம்	ரூ. 15,100/-

கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலம் குறுந்தொழில்கள்

கனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் பயனாளிகளை அதிகபட்சமாக 5 உறுப்பினர்களை கூட்டுப் பொறுப்புக் குழுக்களாக இணைத்து அவர்கள் விரும்பும் குறுந்தொழில்களை செய்ய NABFINS நிதி நிறுவனத்துடன் இணைந்து குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 100 கூட்டுப் பொறுப்புக் குழு பயனாளிகள் தேர்ந்தெடுக் கப்பட்டு, பல்வேறுநிலைகளில் ஆய்வு செய்யப்பட்டு வல்லுநர்கள் மூலம் தொழிலுக்குத் தேவைப்படும் கடன் தொகை நிர்ணயம் செய்து முன் மொழிவுகள் பெங்களூரில் உள்ள NABFINS நிறுவனத்திற்கு அனுப்பி, கடன் தொகையில் 5% தொகையை பயனாளிகள்பங்குத்தொகையாகசெலுத்தப்பட்டது. 25% கடன் தொகை திட்ட நிதி உதவியாகவும், 70% NABFINS நிறுவன நிதியாகவும் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.

திட்ட நிதிக்கு 4% வட்டியும், NABFINS தொகைக்கு 15% வட்டி (ரூ. 2 லட்சம் கடன் வரை) கணக்கிட்டு மாதந்தோறும் கடன் தொகை முறையாகத் திரும்பச் செலுத்தப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 2013-2014 மற்றும் 2014-2015ம் ஆண்டுகளில் ரூ. 14,30,974/- பயனாளிகளிடமிருந்து பங்குத் தொகையாக பெறப்பட்டுள்ளது. 100 தொழிற்பிரிவுகளுக்கு மொத்தம் ரூ. 69.35 இலட்சம் திட்ட நிதியாகவும், ரூ. 161.82 இலட்சம் NABFINS நிதியாகவும் அனுமதிக்கப்பட்டு, குறுந்தொழில்கள் கூட்டுப் பொறுப்புகள் மூலம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகிறது.

வியாபார ஊக்குநர்கள், நிறுவன மேம்பாட்டு அலுவலர் ஆகியோரால் தொழிற்பிரிவுகளின் மூலப் பொருட்கள் கொள்முதல், விற்பனை மற்றும் கணக்குகள் பராமரிப்பு முதலியவற்றில் தகுந்த ஆலோசனைகள் அவ்வப்போது வழங்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. இவ்வாறு 100 கூட்டுப் பொறுப்பு குழுக்களை சேர்ந்த 430 உறுப்பினர்களின் குடும்பங்கள் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 100 கூட்டுப் பொறுப்புக் குழு பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்யப்பட்டு வல்லுநர்கள் மூலம் தொழிலுக்குத் தேவைப்படும் கடன் தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மகளிர் தொழில் முனைவோரின் மகத்தான பயணம்

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், வாணகிரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள கடல் குதிரை மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினரான திருமதி. ச. கோவிந்தம்மாள் கூறுகிறார் 'நான் மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவள், என்னுடைய கணவர் சந்திரன் மீன் பிடிக்கும் தொழில் செய்து வருகிறார். பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் நானும், மேலும் செல்வி, இருசம்மாள், வாசுகி, அஞ்சம்மாள் ஆகிய 4 பேரும் இணைந்து கருவாடு தயாரிப்பு தொழில் செய்து வருகிறோம். இதற்கு எங்களுக்கு வட்டியில்லா கடனாக சிறு தொழில் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 2 இலட்சம் வழங்கப்பட்டது. எங்களது பங்குத் தொகையாக ரூ. 30,000/– செலுத்தி, மொத்தம் ரூ. 2.30 இலட்சம் மதிப்பீட்டில் 2013ல் இத்தொழிலை துவங்கி சிறப்பாக செய்து வருகிறோம்.

நாங்கள் மீன்களை வாங்கி, அதை கருவாடு மற்றும் கோழி தீவனங்களாகத் தயாரித்து நேரடியாக மொத்த விலைக்கு கடலூர் பாஸ்கர் அண்ட் கோ, சேலம் முஸ்தபா அண்ட் கோ ஆகிய நிறுவனங்களிடம் விற்பனை செய்து வருகிறோம். அதனால் எங்களுக்குத் தொடர்ந்து வருமானம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எங்களுக்கு இலாபமாக மாதம் ரூ. 40,000/– கிடைக்கின்றது. அதன் மூலம் கடன் தொகையான ரூ. 2,00,000/–த்தை நாங்கள் முழுவதுமாக திரும்ப செலுத்தியுள்ளோம்.

நான் இத்தொழில் மூலம் கிடைத்த வருமானத்தின் மூலம் என் வீட்டை விரிவாக்கம் செய்துள்ளேன். செல்வி என்பவர் தனது மகனை வெளிநாட்டிற்கு அனுப்பியுள்ளார். வாசுகி என்பவர் தனது மகளை கல்லூரியில் பி.எஸ்ஸி., படிக்க வைத்து வருகிறார். அஞ்சம்மாள் தனது மகளுக்கு திருமண செய்து வைத்துள்ளார். இருசம்மாள் என்பவர் வாடகைக்கு படகு எடுத்து தன் மகனுக்குக் கொடுத்துள்ளார்.

கடலோர மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற பேரிடர் மேலாண்மை திறன் வளர்ப்பு பயிற்சி முகாமில் கலந்து கொண்டு, அங்கு பயிற்சி பெற்ற அலுவலர்களுடன் கலந்துரையாடினார்.

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் – உலக வங்கிக் குழுவினர் ஆய்வு

தருமபுரி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்வதற்காக மாநில புதுவாழ்வு திட்டத்தின் திட்ட இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்களுடன், உலக வங்கியின் பிரதிநிதிகள் திரு. சமிக், செல்வி. ஸ்ருதி, செல்வி. தன்யா ஆகியோர் வருகை தந்தனர்.

இக்குழுவினர் அரூர் ஒன்றியம் பறையப்பட்டி புதூரிலும், பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம் மஞ்சவாடி கிராமத்திலும் ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வுக்குப் பின்னர் மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்களை சந்தித்து, புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த விவரங்களை கேட்டு அறிந்து கொண்ட உலக வங்கிக் குழுவினர், அங்கு அமைக்கப்பட்டுள்ள நிரந்தர கண்காட்சி அரங்கினையும் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. நாராயணன், மாநில வல்லுநர்கள் திரு. சக்கரபாணி மற்றும் திரு. சுப்பிரமணி ஆகியோர் உடனிருந்தனர். ■

உலக வங்கிக் குழுவினர் ஆய்வு

பெரம்பலூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்திட உலக வங்கி குழுவினரான திருமதி. ஆஷா பகத், திருமதி. ஸ்மிருதி சாகமூரி, புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா ஆகியோர் 19.03.2015 மற்றும் 20.03.2015 ஆகிய தேதிகளில் பெரம்பலூர் வருகை தந்தனர்.

இக்குழுவினர் வேப்பந்தட்டை ஒன்றியம் திருவாளத் துறை மற்றும் வேப்பூர் ஒன்றியம் அகரம்சீகூர் ஆகிய ஊராட்சிகளிலுள்ள வறுமை ஒழிப்புச் சங்கங்களை பார்வையிட்டனர்.

இப்பகுதியில் உள்ள கோகுல மாதா கறவை மாடு வளர்ப்போர் குழுவிற்கு பாலின் தரம் அறியும் கருவி மற்றும் கட்டமைப்பு நிதி ஆகியவை வழங்கப்பட்டது. கொளக்காநத்தத்தில் செயல்பட்டு வரும் மாற்றுத் திறனாளிகள் குழந்தைகளுக்கான பகல் நேர பாதுகாப்பு மையத்தையும் பார்வையிட்டனர்.

ஆய்வுகளுக்குப் பின்னர் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் திரு. தரேஷ் அஹமது, இ.ஆ.ப., அவர்களை சந்தித்து புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும் கலந்துரையாடினர்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
புது வாழ்வு
திட்டம்

புதுவாழ்வு

நாமக்கல்

உலக வங்கிக் குழுவினர் ஆய்வு

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலைப் பகுதியில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் உறுப்பினர்கள் காபி, மிளகு, அன்னாசி, வாழை போன்றவற்றை பயிரிட்டு, விற்பனை செய்து வருகின்றனர். இவர்கள் பயிர் செய்து வரும் நிலங்களுக்கு சிட்டா அடங்கல் போன்றவற்றை பெற்றுத் தர புதுவாழ்வு திட்டத்தின் வாயிலாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு காய்கனிகள் பயிரிடுதல் குறித்த பயிற்சிகளும், சமையலறைத் தோட்டம் அமைக்கவும் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. கொல்லிமலைப் பகுதியில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட உலக வங்கியின் பிரதிநிதிகளான திரு. ஜீவானந்தம் துரைசாமி, திரு. சோவிக் சீனியர் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் மாநில திட்ட இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., மாநில புதுவாழ்வுத் திட்ட வல்லுநர் திருமதி. சரஸ்வதி கணேசன் ஆகியோர் வருகை தந்தனர்.

இக்குழுவினர் கொல்லிமலையில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஒத்தத் தொழில் குழு புச்சரம், கூட்டமைப்பு ஆகியவற்றின் செயல்பாடுகளை பார்வையிட்டு அவற்றின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினர்.

கொல்லிமலையில் உள்ள புதுவாழ்வுத் திட்டத்தின் பயிற்சி மையம், நெத்துக்குளிப்பட்டி என்ற இடத்தில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் காபி சாகுபடி முறைகள், ஒத்தத் தொழில் குழுவினரின் செயல்பாடுகள் ஆகியவற்றைப் பார்வையிட்ட உலக வங்கிக் குழுவினர், ஒத்தத் தொழில் குழுவால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்து வரும் 'அரப்ளி கோல்டு காபி'யின் தயாரிப்பு மற்றும் விற்பனை குறித்து கலந்துரையாடி, மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கினர். இக்குழுவினருடன் நாமக்கல் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், உதவித் திட்ட மேலாளர்கள், ஒத்த தொழில் குழு, கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம்

உலக வங்கிக் குழுவினர் ஆய்வு மற்றும் பணி நியமன ஆணைகள் வழங்குதல்

விழுப்புரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய செயல்பாடுகளை பார்வையிட 04.03.2015 அன்று உலக வங்கியின் வல்லுநர்களான செல்வி. கரிமா மற்றும் செல்வி. எசபில்லா மற்றும் மாநில புதுவாழ்வு திட்ட வல்லுநர் திரு. சக்கரபாணி ஆகியோர் தியாகதுருகம் மற்றும் சின்னசேலம் ஆகிய ஒன்றியங்களில் கள ஆய்வு மேற்கொண்டனர். கள்ளக்குறிச்சி வேலப்பர் கூட்ட அரங்கில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் சினேடர், சென்னை என்ற நிறுவனத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள மகளிருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. நித்தியானந்தம், உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

சேலம்

சர்வதேச மகளிர் தின விழா

சேலம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் 11.03.2015 அன்று மகளிர் தின விழா மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கொண்டாடப்பட்டது. மாவட்ட ஆட்சியர் திரு. க. மகரபூஷணம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், சுய உதவிக் குழுவினரின் கலாச்சாரப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

இவ்விழாவில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், ஊரக வாழ்வாதார இயக்க மாவட்ட திட்ட இயக்குநர், மாவட்ட சமூக நல அலுவலர், சுகாதாரத்துறை துணை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவை திட்ட அலுவலர், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. தரணி, மாநில வல்லுநர் டாக்டர். புருஷோத்தமன், உதவித் திட்ட மேலாளர்கள், திட்டப் பணியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழு மகளிர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம்

சர்வதேச மகளிர் தின விழா

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் சார்பில் சர்வதேச மகளிர் தின விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவின் துவக்கமாக நடைபெற்ற மகளிர் தினப் பேரணியை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் முனைவர் வி. கே. சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் துவங்கி வைத்தார். சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள், வங்கி தொடர்பாளர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்க கணக்காளர்கள், சமூக மாற்றுத் திறனாளிகள் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஒத்த தொழில் குழுக்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசுகளை வழங்கி வாழ்த்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர், காஞ்சிபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு. ஜி. சிவருத்திரய்யா, உதவி இயக்குநர்கள் (ஊராட்சி), மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட தாட்கோ மேலாளர் மற்றும் புதுவாழ்வுத் திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரம்

பயணிகள் வாகனம் இயக்கம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் போக்குவரத்து வசதியில்லாத குக்கிராமங்களுக்கு பயணிகள் வாகன வசதி ஏற்படுத்தித் தருவதற்காக கமுதி மற்றும் முதுகுளத்தூர் வட்டாரங்களில் உள்ள ஆத்திக்குளம், ஆதனக்குறிச்சி, உலையூர், வெங்காளூர் மற்றும் பெருநாழி ஆகிய ஊராட்சிகளின் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு புதுவாழ்வு திட்டத்தின் கீழ் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி மூலமாக, ரூ. 17.48 இலட்சம் மதிப்பிலான ஆம்னி போக்குவரத்து வாகனங்களை, 19.03.2015 அன்று முதுகுளத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியின் போது மாவட்ட ஆட்சியர் திரு. க. நந்தகுமார், இ.ஆ.ப., அவர்கள் வழங்கி, கொடியசைத்து பயணிகள் வாகனப் போக்குவரத்தை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. ஜெரோம் மற்றும் உதவித் திட்ட மேலாளர் திரு. சுகுமாரன், புதுவாழ்வுத் திட்டப் பணியாளர்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாய் 'தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்' இதழ் விளங்கி வருவதை அனைவரும் அறிவர். பயனுள்ள கட்டுரைகள், வெற்றிக் கதைகள், பொது அறிவு செய்திகள், மருத்துவம், சமையல் மற்றும் அழகுக் குறிப்புகள் போன்ற அனைத்து அம்சங்களும் கொண்ட முற்றம் இதழிற்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். முற்றம் இதழின் வெளியீட்டு செலவினங்கள் ஆண்டுதோறும் அதிகரித்து வருவதால், வரும் 2015 ஏப்ரல் முதல் முற்றம் இதழின் சந்தாத் தொகை சற்று உயர்த்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். உங்களின் ஆதரவு என்றும் எங்களுக்கு உண்டு என்பதை நாங்கள் அறிவோம். எனவே முற்றம் வாசகர்கள் தொடர்ந்து எங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டுகிறோம்.

சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 150/–
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 300/–
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 450/–

விளம்பரக் கட்டணங்கள் விபரம்

அட்டையில்	ரூ. 45,000/–
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 37,500/–
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 30,000/–
அட்டையின் பின்பக்கம்	ரூ. 30,000/–
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 30,000/–

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' என்ற பெயரில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும்.

வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை குறிப்பிட்டு அனுப்பவும்.

ஆண்டிப்பட்டி திட்ட ஒருங்கிணைப்பு அணியில் உள்ள 15 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் செயல்பாடுகள், ஆண்டிப்பட்டி ஒருங்கிணைப்பு அணி அலுவலகப் பணியாளர்கள் மற்றும் உதவித் திட்ட மேலாளர்களின் செயல்பாடுகளை உலக வங்கி குழுவினர் ஆய்வு செய்தனர்.

உலக வங்கிக் குழுவினரின் ஆய்வு

உலக வங்கியின் பிரதிநிதிகளான திரு. ஹனீஸ் ரகமதுல்லா, செல்வி. திமிலா மற்றும் செல்வி. நேத்ரா ஆகியோர் தேனி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்ய 17.03.2015 மற்றும் 18.03.2015 ஆகிய தேதிகளில் வருகை தந்தனர்.

இவர்களுடன் புதுவாழ்வு திட்ட வல்லுநர்கள் திரு. கணேஷ்குமார், திரு. சிவலிங்கம், திரு. அருண்மொழி, திரு. விக்டர், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. கழுகாசலமூர்த்தி, உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பு பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

தேனி மாவட்ட புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் ஆண்டிப்பட்டி வட்டாரம், தெப்பம்பட்டி மற்றும் ரெங்க சமுத்திரம் ஆகிய ஊராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், கூட்டமைப்புகள், ஒத்த தொழில் குழுக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து உலக வங்கிக் குழுவினருக்கு விளக்கிக் கூறப்பட்டது.

மேற்படி ஆய்வுகளுக்குப் பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்களை சந்தித்து புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து உலக வங்கிக் குழுவினர் கலந்துரையாடினர்.

தடகள போட்டியில் தங்கம் வென்ற மாற்றுத் திறனாளிகளுக்குப் பாராட்டு

புதுவாழ்வு திட்டத்தின் சார்பாக மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு வாழ்வாதார உதவிகளும், உதவி உபகரணங்கள் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சியும் அளிக்கப்பட்டு அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

மேலும் இவர்களை மாநில மற்றும் தேசிய அளவிலான மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும் ஊக்குவிக்கப்படுகிறது.

கடந்த 19.03.2015 முதல் 22.03.2015 வரை உத்திரபிரதேச மாநிலம் காசியாபாத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான மாற்றுத் திறனாளிகளுக்கான தடகள போட்டியில், காஞ்சிபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்டத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளான செல்வி. மீனா என்பவர் 100 மீட்டர் ஓட்டப் பந்தயம் மற்றும் நீளம் தாண்டுதலில் தங்கப் பதக்கமும், 200 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளிப் பதக்கமும், திரு. சண்முகம் என்பவர் 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெண்கலப் பதக்கமும் வென்று காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

பதக்கங்கள் வென்ற மாற்றுத் திறனாளிகளான மீனா மற்றும் சண்முகம் ஆகிய இருவரையும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் முனைவர் வி. கே. சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டினார். இந்நிகழ்வின் போது மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் உடனிருந்தனர்.

மாற்றுத் திறனாளிகள் மாநில மற்றும் தேசிய அளவிலான மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும் ஊக்குவிக்கப்படுகிறது.

சாதனை படைத்த மாற்றுத் திறனாளிகள்

புதுவாழ்வு திட்டம் சார்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு தடகள விளையாட்டுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்களை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறும் தடகளப் போட்டிகளில் பங்கு பெறச் செய்யப்பட்டு, அவர்களின் திறன்களை வெளிக்கொணர பெரிதும் ஊக்குவிக்கப்படுகிறது. போட்டிகளில் கலந்து கொள்ளும் மாற்றுத் திறனாளிகள் பதக்கங்களை வென்று நமது மாநிலத்திற்கும் புதுவாழ்வு திட்டத்திற்கும் பெருமை சேர்த்து வருகின்றனர்.

இதன் ஒருபகுதியாக உத்தரபிரதேச மாநிலத்தில் நடைபெறும் 15வது மூத்தோர் தேசிய பாரா ஒலிம்பிக் தடகளப் போட்டிகளில் பங்கேற்க தகுதி பெற்ற மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு புதுவாழ்வு திட்டம் மூலம் பாரா ஒலிம்பிக் பயிற்சியாளர் திரு. ரஞ்சித் அவர்களால் மதுரையில் 14.03.2015 முதல் 16.03.2015 வரை பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சிக்குப் பின்னர் போட்டிகளில் கலந்து கொள்ள செல்லும் மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு வழியனுப்பு நிகழ்ச்சி 16.03.2015 அன்று நடைபெற்றது. மதுரை மாவட்ட ஆட்சியர் முனைவர் இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, விளையாட்டு வீரர்களுக்கு புதுவாழ்வு திட்டம் மூலம் வழங்கப்பட்ட உடைகள் மற்றும் உபகரணங்களை வழங்கி வாழ்த்தினார்.

எப்.வி.எஸ். ஃப்டு நிறுவனத்தின் மூலம் அனைத்து வீரர்களுக்கும் டிராவல்பேக் வழங்கப்பட்டது. மதுரை மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சுபாஷ் இந்நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்தினார்.

தேசிய அளவிலான 15வது மூத்தோர் பாரா தடகளப் போட்டிகள் 19.03.2015 முதல் 22.03.2015 வரை உத்திரபிரதேச மாநிலம் காஸியாபாத்தில் உள்ள மத்தியலா கோவிந்தப்புரம் என்ற இடத்தில் நடைபெற்றன. 26 மாநிலங்களைச் சேர்ந்த 516 மாற்றுத் திறனாளி வீரர்கள் கலந்து கொண்ட இப்போட்டிகளில் தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம் சார்பில் 17 வீரர்களும், புதுவாழ்வு திட்டத்தை சாராத வீரர்கள் 30 பேரும் பங்கு கொண்டனர்.

தமிழ்நாட்டின் சார்பில் கலந்து கொண்ட 47 மாற்றுத் திறனாளி வீரர்கள் 11 தங்கம், 16 வெள்ளி மற்றும் 6 வெண்கலம் என மொத்தம் 33 பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இதில் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட 17 மாற்றுத் திறனாளி வீரர் வீராங்கனைகள், ஓட்டம், குண்டு எறிதல், ஈட்டி எறிதல், உயரம்தாண்டுதல்மற்றும்நீளம்தாண்டுதல் ஆகிய போட்டிகளில் கலந்து கொண்டு முறையே 8 தங்கம், 8 வெள்ளி மற்றும் 4 வெண்கலம் என 20 பதக்கங்களை வென்று புதுவாழ்வு திட்டத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாரியப்பன் என்பவர் உயரம் தாண்டுதல் போட்டியில் முந்தைய சாதனையை முறியடித்து, பாரா ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்வதற்கு தகுதி பெற்றுள்ளார். மீனா (காஞ்சிபுரம்), அறிவழகி மற்றும் சிவகாமி (அரியலூர்), இளையராணி (விழுப்புரம்), திவ்யா (பெரம்பலூர்) மாரியப்பன் (சேலம்) ஆகியோர் சர்வதேச பாரா தடகள சாம்பியன் போட்டிகளில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர்.

விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்று பதக்கங்களை வென்று தமிழகத்திற்கும், புதுவாழ்வு திட்டத்திற்கும் பெருமை சேர்த்த வீரர் வீராங்கனைகள் 25.03.2015 அன்று தமிழகம் வந்தடைந்தனர். ஊனத்தை வென்று சாதனைகள் படைத்து வரும் வீரர் வீராங்கனைகளை அனைவரும் வாழ்த்தி மேலும் பல வெற்றிகளைப் பெற ஊக்குவித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டின் சார்பில் இப்போட்டிகளில் கலந்து கொண்ட 47 மாற்றுத் திறனாளி வீரர்கள் 11 தங்கம், 16 வெள்ளி மற்றும் 6 வெண்கலம் என மொத்தம் 33 பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்து, தமிழகத்திற்கும் புதுவாழ்வு திட்டதிற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

மக்கிய தென்னை நார்க் கழிவின் பயன்கள்

1. தென்னை நார் துகள்களை சேர்ப்பது, மண்ணின் அமைப்பு, கட்டமைப்பு மற்றும் மண்ணின் குத்து ஆகியவற்றை மேம்படுத்துகிறது. மணற்பாங்கான மண் மிகவும் கச்சிதமானதாக ஆகிறது. மற்றும் களிமண் பாங்கான மண் மிகவும் பயிரிடக் கூடியதாக ஆகிறது.
2. மண் ஒருங்கிணைப்பை மேம்படுத்துகிறது.
3. மண்ணின் ஈரப்பதம் அதிகரிப்பதற்கு பங்களிக்கும் விதமாக மண்ணின் நீர்பிடிப்புத் திறனை மேம்படுத்துகிறது. (அதன் உலர் எடையை விட 5 மடங்கு அதிகமாக)
4. துணை மேற்பரப்பு மண் இரண்டிற்குமான மொத்த அடர்த்தி (15-30 செ.மீ.) தென்னை நார்க்கழிவின் பயன்பாட்டினால் குறிப்பிடத்தக்க அளவுக்கு குறைக்கப்படுகிறது.
5. மக்கிய தென்னை நார்த் துகள்கள் அனைத்து தாவரச் சத்தின் கூறுகளையும் கொண்டிருக்கிறது. மற்றும் கனிம உரங்களின் துணை விளைவை அது வழங்குகிறது.
6. மக்கிய தென்னை நார்க்கழிவுப் பயன்படுத்தப்படும் போது, மண்ணின் எதிரணனிப் பரிமாற்றத்தில் மேம்பாடு இருக்கிறது.
7. மக்கியப் பொருட்கள் சேர்க்கப்படுவதன் காரணமாக, தென்னை நார்க்கழிவின் பயன்பாடு மண்ணின் இயற்கை நுண்ணுயிரிகளை அதிகரிக்கச் செய்கிறது.
8. அமோனியமாக்கல், நைட்டிரிக்காக்கல், நைட்ரஜன் சீர்படுத்தல் ஆகியவை நுண்ணுயிரியல் செயல்பாட்டின் காரணமாக மேம்படுகிறது.

மக்கிய கழிவைப் பயன்படுத்துவதற்கான வரம்புகள்

மக்கிய தென்னை நார்க்கழிவை வாங்கி அவற்றை பண்ணையின் பெரிய பகுதியில் போட்டு வைப்பது சிக்கனமானதல்ல. சொந்தப் பண்ணையில் உரத்தை தயார் செய்வது சிறந்ததாகும். மக்கிய தென்னை நார் கழிவை துகள்களாக வாங்குதற்கு முன்னால், அந்தப் பொருள் முற்றிலும் மக்கியிருப்பதையும், அதற்கான தரப் பகுப்பாய்வு சான்றிதழ் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். முற்றிலும் மக்காத உரத்தை வாங்கி, மண்ணில் பயன்படுத்தினால், அது மண்ணில் இருக்கும் ஊட்டச் சத்துக்களை எடுத்துக் கொண்டு, மண்ணிற்குள் சிதைவதால் வளர்ந்திருக்கும் பயிர் பாதிக்கப்படும்.

மக்கிய தென்னை நார் கழிவை துகள்களாக வாங்குதற்கு முன்னால், அந்தப் பொருள் முற்றிலும் மக்கி யிருப்பதையும், அதற்கான தரப் பகுப் பாய்வு சான்றிதழ் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

முடிவுரை

உரத் தொட்டி குறைந்த துவக்கச் செலவைக் கொண்டிருக்கிறது என்றாலும், ஒரு வீட்டு உரத் தொட்டியை வைத்திருப்பதன் பொருளாதார நன்மைகள் எண்ணற்றவை. ஒரு குப்பைப் பை சிறிது காலத்திற்கு நிரம்பாது என்பதால், அந்தப் பையை நீங்கள் வாங்க வேண்டியிருக்காது. மேலும், குப்பையை வெளியே எடுத்துச் செல்பவர்கள், தாங்கள் அதை சிறிது காலத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்காது என்பதை எண்ணி மகிழ்வார்கள். ஒரு குறிப்பிட்ட அளவிலான குப்பைத் தொட்டியை வாங்குவதற்காக செலவழிப்பவர்களுக்கு, தங்கள் குப்பைத் தொட்டியின் அளவைக் குறைத்து பணத்தை மிச்சப்படுத்த முடியும். ஒரே வீட்டினுள் இருக்கும் பெரிய குடும்பம் என்றால் சேமிக்கப்படும் பணத்தைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும்.

பண்ணைக் கழிவுகளில் இருந்து உரம்

முனைவர் வெ. புருஷோத்தமன்
வணிக மேம்பாடு மற்றும் கூட்டாண்மை
வல்லுநர்-II
புதுவாழ்வு திட்டம்

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (60,300 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

சுகாதாரமாய் வாழ்ந்திடுவோம்!
உடல் நலத்தை காத்திடுவோம்!!

செய்யக்கூடாதவை



திறந்த வெளியில் மலம் கழிக்காதீர்கள்.

நீரை காய்ச்சாமல் பருகாதீர்கள்.

மூடப்படாத உணவை உண்ணாதீர்கள்.

செய்ய வேண்டியவை



மலம் கழிக்க கழிப்பறையை பயன்படுத்துங்கள்.

கைகளை சோப்பால் கழுவுங்கள்.

காலை – இரவு பல் துலக்குங்கள்.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH/(C)/455/15-17 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2015 - 17
Date of Publication 22.04.2015